नारोजीपण्डितविरचिता

सूक्तिमालिका

SUKTIMĀLIKĀ

By

NĀRŌJEE PAṆDITA

TAMIL TRANSLATION

By

N. S. DĒVANĀTHĀCHĀRIAR

ஸூக்தி மாலிகா

எனும் இந்நூல்

நாரோஜீ பண்டிதர்

எனும் புலவர்பெருமானல் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றப்பட்டது

தஞ்சாவூர் ஸரஸ்வதி மகால் நூல்நிலயத்தின்
ஸம்ஸ்க்ருத வித்வான்
நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி ஸரஸ்வதி மகால்
நூல்நிலய நிர்வாகக் குழுவினருக்காக
கௌரவ காரியதரிசி
ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களால்

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பெற்றது.

சகம் 1883
கி. பி. 1961

விலை ரு. 1-00

ஸூக்தி மாலிகா

விஷய அட்டவணை.

	விஷயம்		பக்கங்கள்
	முகவுரை		2
1	நமஸ்கார	பத்ததி	1—8
2	தைவ	,,	11
3	நீதி	,,	17
4	ஸஜ்ஜன	,,	22
5	துர்ஜன	,,	29
6	ஸாமான்ய	,,	37
7	அன்யோக்தி	,,	54
8	கதா	,,	61
9	சுலோகங்களின் அகராதி		3

முகவுரை

"ஸூக்திமாலிகா" என்னும் இந்நூல் தஞ்சை ஸரஸ்வதி மகால் சுவடி நெ. B-13913/D-23831 என்னும் எண்ணுள்ளது. ஸூக்தி-நன்மொழி. மாலிகா—சிறு மாலை. "நல்வார்த்தைகளாகிற நறுமணம் மிக்க மலர்களால் தொடுக்கப் பெற்ற சிறு பூமாலை" என்பது பெயருக்குப் பொருள். மிகமிகப் பொருத்தமான பெயர். மணம் நிறைந்த மலர்களாலான மாலையை இதயத்தில் (மார்பில்) தரித்துக்கொள்பவர், தானும் இன்புற்று, பிறருக்கும் நல்ல மணத்தைப் பகிர்ந்து கொடுத்து அனைவருடையவும் நன்மதிப்பைப் பெறுவதுபோலவே, இந்நூலை மனப்பாடம் செய்து இதயத்தில் தரித்துக்கொள்பவர், இதில் பதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களைத் தானும் உணர்ந்து பயன்பெறுவதுடன், உற்ற தருணத்தில் பிறருக்கும் அவற்றை எடுத்துரைத்து அனைவருடையவும் நன்மதிப்பைப்பெறுவர். இக்கருத்திலேயே இந்நூலின் பெயர் அமைந்துள்ளது.

இதை இயற்றியவர் "**நாரோஜீ பண்டிதர்**" என்பவர். "நாராயண" என்னும் பெயரே, பெயரின் முடிவில் வழிக்கமாகச் சேர்க்கும் "ஜீ"யுடன் சேர்ந்து "நாரோஜீ" எனத்திரிந்தது. பண்டித குலத்தில் தோன்றினமையின், குடிப் பெயரான "பண்டிதர்" என்னும் சொல்லும் பெயருடன் இணைக்கப்பட்டு வழங்குகின்றது.

ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள தர்க்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்கள் பலவற்றையும், வேத வேதாந்தங்களையும் முறைப்படி கற்றுத் தேர்ந்த இவர் தஞ்சையை ஆண்டுவந்த மகாராஷ்டிர மன்னர்களின் "அஷ்டப்ரதான்" எனப்படும் முக்கியமான மந்திரிமார் எண்மருள் ஒருவராகத் திகழ்ந்தவர். ஒப்பற்ற நாவீறு படைத்தவர். சமீப காலத்தில் வாழ்ந்தவர். "டபீர்" என்பது இவருடைய அக்காலத்துப் பட்டப்பெயர். மராட்டி பாஷையைத் தாய் மொழியாகக்கொண்ட குடியில் தோன்றியவர். இதுபோல், "லக்ஷண சதகம்" "போஜன குதூகலம்" "குருஸ்துதி" என்னும் சிறு நூல்கள் மூன்றும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. ஸூக்திமாலிகா என்னும் இந்நூலும் லக்ஷணசதகமும் தமிழ்மொழி பெயர்ப்பில்லாமல் மூலம் மட்டும் அச்சிடப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. இவரது பொன்மொழியாகிய பழமொழிகள் இவரது வாழ்நாளிலேயே மிகவும் பிரசித்தமாகி நாடெங்கும் புலவர் பெருமக்களால் போற்றப்பட்டு வந்துள்ளமைக்குச் சான்றுகள் பலவுள.

இந்நூலைப் படித்து இதில் பொதிந்துள்ள உயரிய கருத்துக்களைத் தமிழ் நாட்டு மக்கள் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவாவினல் எளிய தமிழ் நடையில் என்னல் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டது. சாதாரணமாக

மூலத்தின் கருத்து மொழி-பெயர்ப்பில் தரப்பட்டுள்ளது. பதவுரை கிடையாது. சிலேடையால் அமைந்த சுலோகங்களில் சுவை குன்றாது பொருளை விளக்குவது சற்று கடினமாகவே இருந்தது. ஸம்ஸ்க்ருத மொழியில் உள்ள சிலேடைப் பதங்களுக்கேற்ற சொற்கள் அதே கருத்துள்ளவையாகத் தமிழிலும் கிடைப்பதில்லை. அதனால் அவ்விடங்களில், சம்பந்தப்பட்ட இரு கருத்துக்களையும் தனித் தனியாகவே எழுதியுள்ளேன். இதில் "அன்யோக்தி பத்ததி" மிகவும் ரஸமுள்ளது இந்நூலின் சுலோகங்களை அகாராதியாக வரிசைப்படுத்தி முடிவில் அவற்றின் அடிவரவையும் சேர்த்துள்ளேன். ஏதேனும் பிழைகள் இடம் பெற்றிருப்பின், புலவர் பெருமக்கள் அதற்காக என்னை மன்னித்தருள வேண்டுகின்றேன்.

ஸரஸ்வதி மகால்,
தஞ்சாவூர்,
9—7—61.

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்.

श्रीः

श्री नारोजीपण्डितविरचिता

सूक्तिमालिका

श्रीगणेशाय नमः

विनायकं नमस्यामि समस्तकविनायकम् ।
दधानं मोदकं हस्ते भक्तचित्तप्रमोदकम् ॥ १ ॥

सदाशिवस्ते जनको माता ते सर्वमङ्गला ।
विघ्नेशस्त्वं गणपते! तस्मादादौ नमाम्यहम् ॥ २ ॥

विश्वनाथं गुरुं नत्वा भवानीं मातरं तथा ।
नारोजीपण्डितेनेयं क्रियते सूक्तिमालिका ॥ ३ ॥

ஸ்ரீ நாரோஜீ பண்டிதரால் இயற்றப்பட்ட

ஸூக்திமாலிகை

ஸ்ரீ கணேசனை வணங்குகிறேன்.

கவிகள் யாவருக்கும் தலைவரும், கையில் கொழுக்கட்டையைத் தரித்திருப்பவரும், அடியார்களுடைய மனத்தை மகிழச் செய்பவருமான வினாயகரை வணங்குகிறேன். (௧)

உமது தந்தையார் "ஸதாசிவன்" (எப்பொழுதும் மங்களமாகவேயிருப்பவர்.) உமது தாயார் "ஸர்வ மங்களா" (எல்லாவிதமான மங்களங்களுக்கும் உறைவிடமானவள்) ஓ கணபதியே! நீர்தாமே இடையூறுகளுக்கு அரசன். அதனால் முதலில் (உம்மை) நான் வணங்குகிறேன். (௨)

"விச்வநாதன்" என்னும் தந்தையாரையும், "பவானீ" என்னும் தாயாரையும் வணங்கி, "நாரோஜீ" பண்டிதரால் (என்னால்) இந்த "ஸூக்தி மாலிகை" இயற்றப்பெறுகின்றது. (௩)

गुरुवाक्यैकनिष्ठानां सदा सन्मार्गचारिणाम ।
विबुधानां सुमनसां प्रीतये क्रियते कृतिः ॥ ४ ॥

सुवृत्ता सरला हृद्या चित्रालंकारसंयुता ।
कान्तेवेयं सुकविता मनोजानन्ददायिनी ॥ ५ ॥

अथ नमस्कारपद्धतिः

शिवस्य

कङ्कणवद्धृतगङ्गं कोङ्कणसिद्धाय दर्शितस्वाङ्गम ।
कङ्कणशोभिभुजङ्गं कोङ्कणनाथं नमामि साष्टाङ्गम ॥ ६ ॥

पुरा पुराणदंष्ट्रिणा गवेषितं स्वशक्तितः
सुरासुराधिपैः सदा प्रपूजितं प्रयत्नतः ।

குருவின் வார்த்தையிலேயே ஊன்றி நிற்பவரும், எக்காலமும் நல்வழியிலேயே செல்பவரும், தூயமனமுள்ளவருமான அறிஞர்களின் இன்பத்திற்காகவே இந்நூல் இயற்றப்பெறுகின்றது. (௪)

நல்ல விருத்தியையுடையதும் (கைசிகீ- ஆரபடீ-முதலிய வ்ருத்திகளையுடையதும்), எளிதில் பொருள் விளங்குமாறு அமைந்ததும், மனதைக் கவருவதும், விசித்திரமான அணிகளுடன் கூடியதும் (சொல்லணி-பொருளணி முதலியவற்றுடன் கூடியதும்), ஆகிய இந்த நல்ல கவிதையானது; நல்லொழுக்கமுள்ளவளும், எளியவளும், கவர்ச்சிகரமான தோற்றமுள்ளவளும், விசித்திரமான அணிகளையுடையவளுமாகிய காதலிபோல் மனத்திற்கு (மன்மதனுக்கு) ஆனந்தத்தைத் தரும். (௫)

நமஸ்கார பத்ததி (சிவனுக்கு)

கங்கணம் (தலையில் அணிந்துகொள்ளும் மாலை) போல் கங்கையைத் தரித்தவரும், கொங்கணசித்தருக்குத் தனது வடிவத்தைத் காட்டியவரும், பாம்புகளைக் கைவளையாக அணிந்து விளங்குபவருமான கொங்கணநாதனை [1] ஸாஷ்டாங்கமாக வணங்குகிறேன். (௬)

---

1. ஸாஷ்டாங்கமாக வணங்குவது—எட்டு அங்கங்களால் வணங்குதல். இரு பாதங்கள், இரு முழங்கால்கள், இரு கைகள், மார்பு, தலை, ஆகிய எட்டு உறுப்புக்களால் வணங்குதல் என்றபடி,

धराधरात्मजाकरप्रफुल्लपद्मलालितं
सदा शिवं करोतु नः सदाशिवांघ्रिपङ्कजम् ॥ ७ ॥

यस्माद्विश्वमिदं बभूव स जगत्स्रष्टापि यस्मादभूत्
यद्देवाः शिरसा वहन्ति सुमनोव्रातेषु मुख्यं हि यत् ।
तल्लक्ष्मीनिलयं शिवांघ्रिकमलं हित्वा वृथा ते भ्रमि-
श्चेतश्चञ्चलचञ्चरीक भवता तत्रैव संरम्यताम् ॥ ८ ॥

सुरद्रुमे सति त्वयि प्रपन्नवाञ्छितार्थदे
समस्तलोकनायके महेश सूरिपालके ।
भजामहे फलार्थिनो वयन्तु निम्बभूरुहं
कठोरकाकपोषकं कटुप्रसूनकोरकम् ॥ ९ ॥

ஸதாசிவன் என்பது சிவபெருமானுடைய பெயர்களிலொன்று. எக்காலத்திலும் மங்களமானவர் என்பது அதன் பொருள். அவரது பாதங்கள் தாமரை மலர் போன்றவை. பண்டை நாட்களில் (பன்றியாக அவதரித்த திருமாலால்) பழைய பன்றியால் தன் சக்தியுள்ளவரை தேடப்பெற்றவை. தேவர்களின் தலைவர்கள்—அசுரர்களின் தலைவர்கள் ஆகியவர்களால் எக்காலமும் பெருமுயற்சியுடன் சிறப்பாகப் பூஜிக்கப்பட்டவை. (இமய) மலையின் மகளான பார்வதியின் தாமரை மலர்போன்ற கைகளால் வருடப்பட்டவை. இப்படிப்பட்ட சிவபெருமானுடைய அடிகளிரண்டும் நமக்கு எக்காலத்திலும் நன்மையைப் பண்ணவேண்டும். (எ)

எதனின்றும் இவ்வுலகனைத்தும் தோன்றியதோ, எல்லா உலகங்களையும் படைத்தவனாகிய அந்த நான்முகனும் எதனின்றும் தோன்றினனோ; தேவர்கள் யாவரும் எதைத் தலையால் தாங்குகின்றனரோ, தேவர்கள் குழாங்களில் எது மிகவும் முக்கியமானதோ, அப்படிப்பட்டதும், லக்ஷ்மிக்கு இருப்பிடமுமான சிவபெருமானுடைய திருவடித் தாமரையை விட்டு; எங்கும் நிலைநிற்காமல் ஓடும் வண்டுபோன்ற ஏ மனமே! நீ வீணாக வேறு இடங்களிலெல்லாம் திரிகிறாய். நீ சிவபெருமானுடைய திருவடிகளிலேயே ஊன்றியிரு. (அ)

(சிவபெருமானே!) தன்னையடைந்தவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கவல்லவனும், எல்லாவுலகங்களுக்கும் நாயகனும், அறிஞர்களைக் காப்பவனுமாகிய கற்பகமரம் (போன்ற) நீயிருக்க; பழங்களை (நற்கதியை) விரும்

शंभुं विभुं विबुधवन्द्यपदारविन्दं
भक्त्यैकलभ्यमतुलं शरणं विहाय ।
भो चित्त! चिन्तितमनोरथजाल! कस्मा-
त्त्वं परिभ्रमसि धावसि दूरदूरम् ॥ १० ॥

करधृतमृगबालं भक्तचित्तानुकूलं
श्रितसुरतरुमूलं कामिनीकेलिलोलम् ।
गललसदहिमालं नेत्रसंशोभिभालं
श्रितजनपरिपालं तं भजे कालकालम् ॥ ११ ॥

विष्णुं केचिदुपासते सुरवरं केचिच्च वैश्वानरं
केचिद्भक्तियुता भजन्ति पवनं केचिच्च तस्यात्मजम् ।
ध्यायामो वयमद्रिजासहचरं चन्द्रार्धचूडाधरं
सान्द्रानन्दमयं शिवं सुरगणैः सेन्द्रैः सदा पूजितम् ॥ १२ ॥

பும் நாங்கள், கொடிய காகத்தை வளர்ப்பதும், கசப்பான அருப்பு, மலர் இவற்றையுடையதுமான வேப்பமரத்தை அடைந்து கஷ்டப்படுகிறோம். (௯)

எங்கும் வியாபித்திருப்பவரும், தேவர்களால் வணங்கப்பட்ட தாமரை மலர்போன்ற திருவடிகளையுடையவரும், பக்தி ஒன்றினாலேயே அடையக்கூடியவரும், இணையற்றவரும், (தன்னையண்டினவர்களைக்) காக்கும் இயல்புள்ளவருமான சம்புவை (சிவனை) விட்டு, ஏ மனமே! எண்ணிறந்த ஆசைகளையே சிந்தித்திருக்கும் நீ, ஏன் வீணாகவே திரிகிறாய்? வெகுதூரம் ஓடுகிறாய்? (௰)

மான்குட்டியைக் கையிலேந்தியவரும், அடியார்களுடைய சிந்தைக்கினியவரும், கற்பக மரத்தின் அடியில் அமர்ந்திருப்பவரும், காதலியுடன் (பார்வதியுடன்) விளையாடுவதில் (உல்லாஸமாகவிருப்பதில்) ஆசையுள்ளவரும், கழுத்தில் பாம்பு மாலை அணிந்து விளங்குகிறவரும், நெற்றியில் ஒளி வீசும் கண்ணையுடையவரும், தன்னையடைந்தவர்களைக் காப்பவரும், நமனுக்கும் யமனாகியவருமான "அவரை" அடைகிறேன். (௰௧)

சிலர் தேவர்களுள் சிறந்தவரான விஷ்ணுவைத் தியானம் செய்கின்றனர். சிலர் "வைச்வாநரன்" என்னும் தெய்வத்தை உபாஸநம் பண்ணுகின்றனர். ஏனையவர் பக்தியுடன் வாயுபகவானையே தியானித்து வழிபடுகின்றனர். மற்றும் சிலரோவெனில், அவனுடைய (வாயுபகவானுடைய) புதல்வனாகிய அநுமானையே

पाञ्चालीं पतिदेवतां सुचरितां स्त्रीधर्मिणीं मानिनीं
कर्तुं निर्वसनां चकर्ष बलवद्दुष्टः स दुःशासनः ।
तां कष्टां स्वदशां निशाम्य करुणं कृष्णेति चुक्रोश सा
कृष्णस्तां तु यथा ररक्ष सततं शंभो! तथा रक्ष माम् ॥ १३ ॥

जन्म मास्त्वेव मास्त्वेव त्यागराज! महीतले!
भवेद्यदि त्वदावासे भवतात्कमलालये ॥ १४ ॥

अथ देव्याः

प्रफुल्लसुरसुन्दरीमकुटरत्ननीराजितं
प्रमत्तमहिषासुरप्रबलसर्वगर्वापहम् ।
जपाकुसुमसप्रभं बुधजनैः सदा पूजितं
शिवे! जयति ते पदं सकलभक्तभाग्यप्रदम् ॥ १५ ॥

போற்றி வழிபடுகின்றனர். ஆனால் நாங்கள் (அவ்வழிகளில் செல்லவில்லை.) இமயமலையின் மகளான பார்வதியை வாழ்க்கைத்துணைவியாகக் கொண்டவரும், பிறைச்சந்திரனைத் தலைமேல் தாங்கியவரும், அகண்டமான ஆனந்தமே (இன்பமே) வடிவமாகவுடையவரும், இந்திரன் முதலான தேவர்கூட்டங்களால் எக்காலத்திலும் பூஜிக்கப்பட்டவருமான சிவபெருமானையே ஏத்தித் தொழுவோம். (௰௨)

பாஞ்சாலி (திரௌபதி) பதிவ்ரதைகளுள் சிறந்தவள். கணவனையே தெய்வமாக நினைப்பவள். சிறந்த ஒழுக்கமுள்ளவள். மானமுள்ளவள். அவளை ரஜஸ்வலையாக இருக்கும் சமயத்தில் நிர்வாணமாக (ஆடையற்றவளாக)ச்செய்ய விரும்பிய கொடியவனான அந்த துச்சாதனன் அவளது ஆடையைப் பலமாக இழுத்தான். அவ்வாறு துக்ககரமான தனது நிலைமையைக்கண்டு அவள் தீனக்குரலால் "ஹா க்ருஷ்ணா" என்று அலறினாள். அவளைக் கிருஷ்ணன் எவ்வாறு காப்பாற்றினாரோ; அவ்வாறே, சிவபெருமானே! என்னைக் காத்தருள வேண்டும். (௰௩)

தியாகராஜனே! (எனக்கு) பூமியில் பிறவியே வேண்டாம்! வேண்டாம்!! அப்படிப் பிறந்தேயாகவேண்டுமாயின்; நீ நிரந்தரமாக வாசஞ் செய்யும் "கமலாலய"த்தில் எனக்குப் பிறவி உண்டாகட்டும். (௰௪)

இனி தேவியின் நமஸ்காரங்கள்.

தேவியே! சிறந்த தேவஸ்த்ரீக்களின் மணிமுடிகளிலுள்ள இரத்தினங்

एतावन्तमनेहसं खलु मया श्रान्तं शिवे त्वत्पदा-
म्भोजद्वंद्वमिदं विहाय न सुखं प्राप्तं फलं वा क्वचित् ।
तत्पूर्वार्जितपुण्यराशिविभवैः साक्षात्कृतं सांप्रतं
जाता क्षेमपरंपरा फलमपि प्राप्तं परैर्दुर्लभम् ॥ १६ ॥

अंबुजनिभशुभवदनां कंबुग्रीवामपारगुणकथनाम् ।
अंबुदलसदलकान्तां अंबुरुहाक्षीं नमामि शिवकान्ताम् ॥ १७ ॥

अथ विष्णोः

यदुकुलजलधिसुधांशो ! भामामानाथ ! कृष्ण ! देवेश ! ।
स्वामिन् ! सद्गुणसिन्धो ! नतजनबंधो ! दयानिधे ! पाहि ॥ १८ ॥

களின் ஒளிகளால் ஆலத்தி வழிக்கப் பெற்றதும், மதம் மிகுந்த மஹிஷாஸுர னுடைய பெருஞ் செருக்கை வேரோடு களைந்தொழித்ததும், செம்பரத்தம்-பூபோல் சிவந்த நிறமுள்ளதும், அறிஞர்களால் எக்காலமும் வழிபடப்பெற்றதும், அடியார்களுக்கு ஸகலவிதமான பாக்கியங்களையும் கொடுக்கும் இயல்புள்ளதுமான உனது திருவடி மிகவும் சிறந்து விளங்குகிறது. (௧௫)

அம்பிகே! தாமரை மலர்போன்ற உனது திருவடிகளை மறந்து இவ்வளவு காலம் துன்பமடைந்தேன். எங்கும் சிறிதளவும் சுகம் கிடைக்கவில்லை. வேறு பயனும் யாதொன்றும் பெற்றிலேன். அப்படிப்பட்ட உனது திருவடியை, முன் பிறவிகளில் செய்த புண்ணியங்களின் மகிமையால் இப்பொழுது கண்களால் பிரத்யக்ஷமாகக் கண்டேன். ஒன்றன்மேல் ஒன்றாக நன்மைகள் தோன்றின. பிறரால் பெறமுடியாத பேறும் பெற்றேன். (௧௬)

தாமரை மலர்போன்ற இனிய முகமுள்ளவளும், சங்குபோன்ற கழுத்து உள்ளவளும், எல்லையில்லாத நற்குணங்களுள்ளவளும், கருமுகில்போல் பிரகாசிக்கும் குழலழகையுடையவளும், தாமரை மலர்கள்போன்ற கண்களையுடையவளுமான சிவனின் மனைவியை வணங்குகின்றேன். (௧௭)

இனி விஷ்ணுவின் நமஸ்காரங்கள்.

யதுவம்சமாகிற பாற்கடலில் தோன்றிய சந்திரனே! ஸத்தியபாமை-ஸ்ரீமஹாலக்ஷ்மி-இவர்களுக்கு நாதனே! விண்ணவர் கோமானே! உடையவனே! நற்குணக்கடலே! அடியார்க்குறவினனே! கருணைக்கடலே! கிருஷ்ணா! காப்பாற்றவேண்டும். (௧௮)

कृतविहगतुरङ्गं भक्तचित्ताब्जभृङ्गं
सकलविबुधतुङ्गं पादसंशोभिगङ्गम् ।
कृतदनुजविभङ्गं कामिनीशोभिताङ्गम्
करविधृतरथाङ्गं तं नमाम्यादिरङ्गम् ॥ १९ ॥

करधृतशरचापं राममानन्दरूपं
सकलभुवनभूपं शर्वगेयप्रतापम् ।
[1] मुनिजनहृततापं सूर्यवंशप्रदीपं
रिपुविनिहितकोपं तं नमाम्येकरूपम् ॥ २० ॥

भक्तानामभयप्रदं भवविधीन्द्रादिस्तुतं शाश्वतं
सन्मार्गप्रतिपादकं शमयुतं दुष्टार्तिदं सुन्दरम् ।
चिद्रूपं गुणसागरं शशिमुखं वेदान्तवेद्यं विभुं
श्रीरामं कलये सदा जनकजानाथं जगन्मोहनम् ॥ २१ ॥

பறவையையே (கருடனையே) குதிரையாக (வாகனமாக)ப் பண்ணிக் கொண்டவரும், அடியார்களின் மனமாகிற தாமரைமலரில் (அமர்ந்திருக்கும்) வண்டுபோன்றவரும், விண்ணவரனைவரிலும் உயர்ந்தவரும், (தன்) திருவடியில் திகழ்கின்ற கங்கையையுடையவரும், அசுரர்களை முறியடித்தவரும், காதலியினால் (திருமகளால்) அழகுற்ற (திருமார்பெனும்) உறுப்பையுடையவரும், கையிலேந்திய திருவாழியையுடையவரும், உலகப் பிரசித்தருமான ஆதிரங்கநாதரை வணங்குகிறேன். (௧௯)

கையில் அம்பும் வில்லுமேந்தியவரும், மனத்துக்கினிய வடிவழகுள்ளவரும், எல்லாவுலகங்களுக்கும் அரசனாகியவரும், சிவபெருமானால் புகழ்ந்து பாடத் தகுந்த வீரச்செயல்களையுடையவரும், முனிவர்களுடைய துயர் தீர்த்தவரும், சூரியவம்சத்திற்கோர் மணிவிளக்குபோன்றவரும், பகைவர்களிடம் சினங்கொள்பவரும், உறுதியான மனமுள்ளவருமான அந்த இராமனை வணங்குகிறேன். (௨௦)

பக்தர்களுக்கு அபயமளிப்பவரும், சிவன்–பிரமன்–இந்திரன்–முதலானவர்களால் துதிக்கப்பட்டவரும், எக்காலத்திலும் நிலைத்திருப்பவரும், நல்வழியை நடத்திக்காட்டி நிலைபெறச் செய்தவரும், ஐம்புலன்களை வென்றவரும், தீயவர்களுக்குத் துன்பம் விளைவிப்பவரும், கண்டார் மனதைக் கொள்ளைகொள்ளும்

---

1. हृतमुनिजनतापं इति स्यात् ।

चन्द्रस्य

यस्योदये कुवलयं सकलं विभाति
यः पाति सर्वविबुधान् स्वसुधारसेन ।
तं रोहिणीरमणमिन्दुममन्दकान्तिं
सर्वार्थदं द्विजपतिं शिरसा नमामि ॥ २२ ॥

इति नमस्कारपद्धतिः ॥

அழகுள்ளவரும், அறிவு (ஞானம்) தானே வடிவமாகக்கொண்டவரும், நற்குணங்களுக்குக் கடல்போன்றவரும், திங்களை யொத்த திருமுகமுடையவரும், வேதாந்தங்களால் (உபநிஷத்துக்களால்) அறியக்கூடியவரும், எங்கும் வியாபித்து நிற்பவரும், ஜனகமஹாராஜனின் திருமகளாகிய சீதையின் கணவனும், உலகெல்லாம் மோஹிக்கும்படியான திருமேனியழகும் குணங்களுமுள்ள ஸ்ரீராமனை எக்காலமும் தியானிக்கிறேன். (உக)

இனி சந்திரனின் நமஸ்காரம்.

எவனுடைய தோற்றத்தினால் பூமண்டலம் முழுதும் (கருநெய்தல் பூக்களெல்லாம்) பிரகாசிக்கின்றதோ; எவன் வானோர் யாவரையும் தனது அமுதப் பெருக்கால் உணவூட்டிக் காப்பாற்றுகிறானோ; ரோஹிணியின் கேள்வனும், அளவற்ற காந்தியுடையவனும், விரும்பிய பேறெல்லாம் தருபவனும், அந்தணர்களின் தலைவனுமான அந்தச் சந்திரனைத் தலையால் வணங்குகிறேன். (உஉ)

நமஸ்கார பத்ததி முற்றும்.

अथ दैवपद्धतिः

सर्वेषा मुपकाराय गृह्यते जन्म सज्जनैः ।
दशावतारा धर्मार्थे गृह्यन्ते विष्णुना सदा ॥ २३ ॥

महता यद्धृतं हस्ते तद्याति परमोन्नतिम् ।
शिवहस्तधृतं शूलं तनुते मंगलं नृणाम् ॥ २४ ॥

हरिनाम्नि वने तीर्थे नदीनाञ्च जले तथा ।
स्वीयत्वं नास्ति कस्यापि सर्वेऽप्यत्रा धिकारिणः ॥ २५ ॥

इक्षुकाण्डा द्रसप्राप्ति र्माक्षिकं मक्षिकामुखात् ।
पट्टसूत्रं कीटमुखात् जायते दैवकारणात् ॥ २६ ॥

नालिकेरफले तोयं माक्षिकं सरघामुखे ।
जलजन्तुषु मुक्ताश्च दैवेनैवो पकल्प्यते ॥ २७ ॥

இனி தைவ பத்ததி.

நல்லோர்கள், எல்லோருடையவும் உபகாரத்திற்காகவே பிறவியை மேற்கொள்வர்; தர்மத்தைக் காப்பதற்காகவே எப்பொழுதும் திருமால் பத்து அவதாரங்களைப் பண்ணுகிறார். (௨௩)

பெரியோர் ஒரு பொருளைக் கையில் ஏந்தினால் அது மிகமிகவுயர்ந்துவிடும். சிவனுடைய கையால் தரிக்கப்பட்ட சூலம் மக்களுக்கெல்லாம் நன்மையையே செய்கின்றது. (௨௪)

திருமாலின் திருநாமம், காடு, புண்ணிய தீர்த்தம், ஆற்று நீர் இவற்றில் எவருக்கும் தனியான உரிமை கிடையாது. இவற்றில் எல்லோரும் உரிமையுள்ளவர்கள். (௨௫)

கருப்பங்கழியினின்றும் இனிய சாறும், தேனீயின் வாயினின்றும் தேனும், பட்டுப் பூச்சியின் வாயினின்றும் பட்டுநூலும் தைவத்தின் காரணமாகத் தோன்றுகின்றன. (௨௬)

தேங்காயினுள் இளநீரும், தேனீயின் வாயில் தேனும், நீருள் வாழும் பிராணிகளுள் முத்தும் தைவத்தினாலேயே உண்டுபண்ணப்படுகின்றன. (௨௭)

जपः प्रयत्नो मन्त्रश्च स्वप्नश्च ज्योतिषं तथा ।
कालानुकूल्ये फलति नास्तिचे द्विफलः श्रमः ॥ २८ ॥

भोक्तव्य मागतं दुःखं धैर्यं मानं न संत्यजेत् ।
पश्चा त्सुखं भवत्येव दैव मेवात्र कारणम् ॥ २९ ॥

कालेन दुःख मायाति कालेन च मह त्सुखम् ।
कालस्यैव वशे सर्वं बुद्धि रत्र न कारणम् ॥ ३० ॥

दुःखं न तिष्ठति चिरं सुखन्त्वागामिष्यति ।
दुःखं भुक्त्वा सुखं प्राप्ता नलरामयुधिष्ठिराः ॥ ३१ ॥

भोगार्थं तु शरीरं हि जायते पूर्वकर्मतः ।
तत्र दुःखं सुखञ्चैव क्रमादेवा भिजायते ॥ ३२ ॥

ஜபம் செய்தல், மனிதனுடைய முயற்சி, மந்திரம், கனவு, சோதிடம், இவையெல்லாம் நல்லகாலமிருந்தால்தான் பலிக்கும். அஃதில்லையேல் சிரமம் பயனற்றதாகிவிடும். (௨௮)

துன்பம் வருமாயின் அதை(த்துணிவுடன்) அனுபவிக்கவேண்டும். தைரியத்தையும் மானத்தையும் கைவிடக் கூடாது. பிறகு சுகம் கிடைப்பது திண்ணம். தைவமே இவற்றின் காரணம். (௨௯)

துக்கம் அதற்கேற்ற காலத்தில் வந்து சேருகின்றது. மகத்தான சுகமும் உரிய காலத்தில் வந்து சேரும். (ஆதலால்) எல்லாம் காலத்தின் ஆட்சியிலேயே உள்ளது. இதில் புத்தி காரணமில்லை. (௩௰)

துக்கம் வெகுகாலம் நீடிக்காது. சுகமும் வரும். பெரும் துக்கத்தை யனுபவித்த பிறகு, நளமகாராஜன்-இராமன்-தருமபுத்திரர்-இவர்கள் சுகத்தை யடைந்தனர். (௩௧)

சுகதுக்கங்களை அனுபவிப்பதற்கேற்றதான (இந்த) உடம்பு முன்வினை யின் பயனாகவே உண்டாகின்றது. அதில் துக்கமும் சுகமும் (வினைப்பயனாக) முறைப்படியே வரும். (௩௨)

दैवं स्वतन्त्रं सहजं ज्ञायते न कदाचन ।
गर्भिणी पृच्छति प्रश्नं पुत्रो वा कन्यकेति वा ॥ ३३ ॥

भार्या जातानुरागा भजति तनुभुवः सादरं भक्तिभाजो
मित्राणि प्रीतिमन्ति प्रभु रतिदयते बांधवाः स्वान्तरङ्गाः ।
किं वा वक्ष्यामि ? चित्रं! रिपुरपि भजते भीतितः प्रीतभावं
जाते दैवानुकूल्ये सकलमपि जग ज्जायते स्वानुकूलम् ॥ ३४ ॥

इति दैवपद्धतिः ॥

"தைவம்" சுதந்திரமானது (யாருக்கும் கட்டுப்படாதது). (ஒவ்வொருவருக்கும்) உடன் பிறந்தது. (ஆனால்) ஒருபோதும் அறியப்படுவதில்லை. ஒரு உதாரணத்தால் இதையறியலாம். ஒரு கர்ப்பிணியான ஸ்த்ரீயின் வயிற்றில் உள்ள சிசு, ஆணா பெண்ணா என்பது அவளுக்கே தெரிவதில்லை. அதற்காக அவள் ஜோஸ்யரை "ஆரூடம்" கேட்கிறாள். தன் வயிற்றினுள் இருப்பதைத் தானேயறிய முடியவில்லை! அதுபோலவே நிழல்போல் தன்னைத் தொடர்ந்துவருவதும் தன்னுடன் பிறந்ததுமாகிய தைவத்தையும் அவரவர் அறிய முடிவதில்லை. ஆனால் தைவம் இருப்பது மறுக்கமுடியாத உண்மை. (தைவம் = அவரவரது நல் - தீவினை.) (௩௩)

மனைவி பேரன்புள்ளவளாயிருக்கிறாள். தாய் தந்தையரிடம் பக்தியுள்ள குழந்தைகளைப் பெற்றுப் பரிவுடன் பேணி வளர்க்கிறாள். அன்புள்ள நண்பர்கள் பலர். அரசனும் அதிகமாகக் கருணை காட்டுகிறான். உற்றாருறவினர் யாவரும் அந்தரங்கமாக (ஆழ்ந்த அன்புள்ளவர்களாக) இருக்கின்றனர். இவ்வற்புதத்தை என்னென்று சொல்வேன்? பகைவனுங்கூட பயத்தினால் அன்புள்ள தன்மையை அடைகிறான். தைவம் அனுகூலமானால் உலகம் முழுதும் தனக்கு அனுகூலமாகவே மாறிவிடுகின்றது. (௩௪)

தைவ பத்ததி முற்றும்.

अथ नीतिपद्धतिः ॥

जन्मनो भूषणं कीर्तिः, पत्नी गेहस्य भूषणम् ।
स्वाकृते भूषणं विद्या, सुपुत्रः कुलभूषणम् ॥ ३५ ॥

[1] श्रेयसो भूषणं दानं, दया दानस्य भूषणम् ।
दयाया भूषणं शान्तिः, शान्तेर्ज्ञानं तु भूषणम् ॥ ३६ ॥

नरस्य भूषणं कीर्तिः, स्त्रीणां लज्जा तु भूषणम् ।
सर्वेषां भूषणं विद्या, विद्याया भूषणं क्षमा ॥ ३७ ॥

दिनस्य भूषणं सूर्यो, निशाया भूषणं शशी ।
देशस्य भूषणं राजा, जन्मनो भूषणं यशः ॥ ३८ ॥

विप्रस्य भूषणं विद्या, शौर्यं क्षत्रियभूषणम् ।
वैश्यस्य भूषणं वित्तं, सन्नतिः शूद्रभूषणम् ॥ ३९ ॥

இனி நீதி பத்ததி.

பிறவிக்கு அழகு புகழ் வீட்டிற்கழகு மனைவி. நல்ல வடிவத்திற்கழகு கல்வி. நல்ல மகன் குலத்திற்கழகு. (௩௫)

செல்வத்திற்கழகு ஈதல் (தானம் பண்ணுதல்). ஈதலுக்கழகு இரக்கம். இரக்கத்திற்கழகு சாந்தி (மன அமைதி). சாந்திக்கழகு அறிவு. (௩௬)

மானிடர்க்கழகு புகழ். பெண்மக்கட்கழகு நாணம். எல்லோருக்கும் அழகு கல்வி. கல்விக்கழகு பொறுமை (சகிப்பு—அடக்கம்). (௩௭)

பகலுக்கழகு ஆதவன். கங்குலுக்கழகு திங்கள். நாட்டிற்கழகு அரசன். பிறவிக்கழகு புகழ். (௩௮)

அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் முறையே, கல்வி—வீறு—பொருள்—வணக்கம், இவையழகாம். (௩௯)

---

1. धर्मार्थावुच्यते श्रेयः कामार्थौ धर्म एव च । अर्थ एवेहवा श्रेयः कामार्थौ धर्म एव च ॥ என்னும் மனுஸ்மிருதி வசனத்தைத் தழுவி இங்கு 'श्रेयः' என்பது செல்வமெனப்பட்டது.

सन्तोष एव सर्वेषां तुष्टिपुष्टिबलप्रदः ।
वने वायुतृणाहारा नागा स्तुष्टा बलोत्कटाः ॥ ४० ॥

सामान्यं सर्वजन्तूनां भुक्ति र्निद्रा रतं भयम् ।
मनुष्येषु विशेषोऽयं ज्ञानं दानं दया क्षमा ॥ ४१ ॥

पुण्यं सत्यं दया दानं शान्तिः क्षान्तिः शमो दमः ।
परलोकस्य पाथेयं गच्छन्त मनुगच्छति ॥ ४२ ॥

दाना न्नास्ति परो धर्मो दाना न्नास्ति परं यशः ।
दाने लीना गुणा स्सर्वे तस्मा द्दानपरो भवेत् ॥ ४३ ॥

पूर्वपुण्यागतं वित्तं तस्य दानन्तु सार्थकम् ।
तद्दानं क्षमया युक्तं पात्रे दत्तं महत्फलम् ॥ ४४ ॥

சந்தோஷமொன்றே (அகமகிழ்ச்சி) யாவருக்கும் உளநிறைவு-செழுமை-வலிவு-இவற்றைத்தரவல்லது. காட்டில் காற்றையும் புல்பூண்டுகளையுமே உணவாகக்கொண்டுள்ள பாம்புகளும் யானைகளும் மகிழ்ச்சியுடனும் மிக்க வலிமையுடனும் வாழுகின்றன. (மனமகிழ்ச்சியே அதன் காரணம்). (௪0)

எல்லாப் பிராணிகளுக்கும், ஊணு முறக்கமும் கலவியும் அச்சமும் பொதுவானது. அதில் மானிடருக்குச் சிறப்பு-அறிவு, ஈதல், இரக்கம், பொறுமை இவைகளாம். (௪௧)

நல்வினை, வாய்மை, இரக்கம், ஈதல், அமைதி, பொறுமை, புலன்களையடக்குதல், மனத்தையடக்குதல், இவை யாவும் மறு உலகத்திற்கான வழியுணவுகளாம். (வழி நடப்பவன் கட்டுச்சோற்றை எடுத்துச்செல்லவேண்டும். ஆனால் இவை அவ்வாறல்ல.) உடையவன் முன்னே செல்லத் தாமாகவே அவனைத் தொடர்ந்து செல்லும். (௪௨)

ஈதலிற் சிறந்ததொரு தருமமில்லை. ஈதலில் மிக்கதொரு புகழில்லை. நற்குணங்கள் யாவும் தானத்திலேயே அடங்கி ஒன்றியுள்ளன. ஆதலால் ஈவதிலேயே ஊக்கங்கொள்ளல் வேண்டும். (௪௩)

முற்பிறவியிற் செய்த புண்ணியத்தினால் செல்வம் சேர்கின்றது. ஈதலொன்றே அதனைப் பயனுறச் செய்யும். அதுவும், பொறுமையுடனும், தகுந்த சற்பாத்திரத்திலும் அமையுமாகில் பெரும்பயனைத் தரும். (௪௪)

दानात् ख्यातिं यथाऽऽप्नोति न तथा बलविक्रमैः ।
स्तुवन्ति दाना त्कर्णन्तु न तथा फल्गुनं जनाः ॥ ४५ ॥

मानुषं दुर्लभं जन्म बहुपुण्येन लभ्यते ।
साधनीयं हितं तत्र येन सद्गति माप्नुयात् ॥ ४६ ॥

सुखा न्मद मवाप्नोति दुःखा दुद्विजते जनः ।
सुखं दुःखं समं यस्य स एव धृतिमान्नरः ॥ ४७ ॥

अतिस्नेहो न कर्तव्यः पुत्रदारधनादिषु ।
अतिस्नेहेन दीपोऽपि याति निर्वाणतां क्षणात् ॥ ४८ ॥

अशाश्वते नवच्छिद्रे शरीरेऽस्मिन् रतिं त्यज ।
चिरस्थायिनि संशुद्धे यशःकाये मतिं कुरु ॥ ४९ ॥

(ஒருவன்) ஈவதினால் எவ்வாறு புகழடைகின்றானோ, அவ்வாறு வலிமையினாலும் வீரியத்தினாலும் அடைய இயலாது. கொடைவள்ளலாகிய கர்ணனை மக்கள் எவ்வாறு புகழ்கின்றனரோ அவ்வாறு அர்ச்சுனனைப் புகழுவதில்லை. (சரு)

மானிடப்பிறவி பெறற்கரிது. பெரும் புண்ணியத்தாலேயே அது கிடைக்கின்றது. அதனால் நற்கதியைப் பெறுவதற்கான நன்மைகளைத் தவறாமல் சாதித்துக்கொள்ள வேண்டும். (சசு)

மக்களுக்குச் சுகம் உண்டானால், அதனால் அவர்கள் செருக்குற்றவராகின்றனர். துன்பத்தைக்கண்டு நடுங்குகின்றனர். இது உலகியற்கை. சுகமும் துக்கமும் எவனுக்குச் சமமாகவேயிருக்கின்றதோ, அவனே மானிடருள் உறுதியுள்ளவன். (சஎ)

மகன்–மனைவி–செல்வம் இவைபோன்றவற்றில் அளவு கடந்த பற்றுதல் (அதிஸ்நேஹம்) கொள்ளுதல் தகாது. அதிஸ்நேகத்தினால் (எண்ணெ மிகுதியினால்) விளக்குங்கூட ஒரு விநாடியில் அணைந்துவிடும் தன்மையை அடைகின்றது. (ஸ்நேஹம்–என்னும் சொல், பற்றுதல்–எண்ணெ–இவையிரண்டுக்கும் பெயர்). (சஅ)

நிலையில்லாததும் ஒன்பது ஓட்டைகளுள்ளதுமாகிய இம்மானிட யாக்கையில் அன்புகொள்ளாதே. நிலையானதும் தூயதுமாகிய புகழுடம்பில் நாட்டங்கொள். (சகூ)

स्ववशे वर्तते जिह्वा क्रियतां हरिकीर्तनम् ।
वाचालता किमर्थं वै क्रियते श्रुतिदूषणी ॥ ५० ॥

वृथा मौनं न धर्तव्यं वाचालत्वं परित्यजेत् ।
वक्तव्यं मधुरं स्वल्पं पण्डितैः समयोचितम् ॥ ५१ ॥

प्रिया वाक् चेन्मनुष्यस्य तस्य सर्वेऽपि बांधवाः ।
सा चेदपूर्वा भवति रिपवः सर्वतो जनाः ॥ ५२ ॥

अनृतं नैव वक्तव्यं महता मान मिच्छता ।
दृष्ट्वा ह्यनृतवक्तारं सर्वो ह्युद्विजते जनः ॥ ५३ ॥

वासःस्रग्भूषणादीनि भूषयन्त्यबुधं नरम् ।
बुधं भूषयते भाषा विबुधै रभिभाषिता ॥ ५४ ॥

धनं माता पिता बंधु र्भार्या पुत्रः सखा सुहृत् ।

தன் வசத்திலேயே இருக்கின்றது நாக்கு. திருமாலின் திருநாமங்களைச் சொல்லுங்கள். காதுகளைக் கெடுக்கும் வகையில் வளவளப்பான பேச்சுக்களால் வாக்குவன்மையைக் காட்டுவதெதற்கு? (௫௦)

வீணாக மௌனம் (வாய் திறவாதிருப்பது) சாதிப்பதும் நன்றன்று. வளவளப்பான பேச்சும் தகாது. சமயத்திற்கேற்றவாறு இனிமையாகவும் திட்டமாகவும் பேசவேண்டும். இதுவே அறிவாளிகளுக்குத்தகும். (௫௧)

ஒருவனுக்கு, இனிய சொல் உண்டாயின் அவனுக்கு எல்லோரும் உறவினராவார்கள். அது அரிதாயின் (அபூர்வமானால்—அ—என்னும் எழுத்தை முன்னால் உடையதானால்—அப்ரியமானால்—என்றபடி) எல்லோரும் பகைவர்களாவார்கள்.

மானத்தைக்காக்க விரும்பும் மேன்மையானவன் ஒருகாலும் பொய் சொல்லக்கூடாது. பொய் சொல்பவனைக் கண்டதுமே மக்கள் யாவரும் நடுங்குகின்றனர். (௫௩)

ஆடைகள், மாலைகள், அணிகள், இவைபோன்ற பொருள்கள் அறிவிலியான மனிதனை அழகு செய்கின்றன. அறிவாளியானவனைபோவெனில், புலவர்களால் (தேவர்களால்) பேசப்படுகின்ற மொழியே அலங்கரிக்கின்றது. (௫௪)

धने तु सुगुणा स्सर्वे तस्मा द्धन मुपार्जयेत् ॥ ५५ ॥

याचकस्य मुखं दृष्ट्वा सर्वे बिभ्यति वै जनाः ।
नायातौ वसुधां तस्मा त्कामधेनुसुरद्रुमौ ॥ ५६ ॥

दत्तं चेत् क्षीणतां याति प्रयत्ना दार्जितं धनम् ।
विद्याधन मपूर्वं हि दत्तं दत्तं प्रवर्धते ॥ ५७ ॥

पुराणश्रवणं सद्भिः संवासः शंभुपूजनम् ।
वेदान्तचर्चा सततं दुःखोन्मूलनहेतवः ॥ ५८ ॥

व्रतं विना ब्रह्मचर्यं गार्हस्थ्यं रमणीं विना ।
न शोभते द्विजातीनां संन्यासो विरतिं विना ॥ ५९ ॥

मनुजस्य सुवृत्तस्य गृहे चेदबला खला ।
लोकेऽस्मिन्नेव स पुमान् निरये पतितो ध्रुवम् ॥ ६० ॥

செல்வம் (பொருள்) ஒன்றே; தாய், தந்தை, உறவினர், இல்லாள், மகன், தோழன், சிநேகிதன், இவையெல்லாமாகும். நற்குணங்கள் யாவும் பொருளி லேயே உள்ளன. அதனுல் பொருளையே தேடவேண்டும். (௫௫)

இரப்பவனுடைய முகத்தைக் கண்டமாத்திரத்தில் மக்கள் யாவரும் அச்ச முறுகின்றனர். அதனுலேயே காமதேனுவும் கற்பக மரமும் பூமிக்கு வரவில்லை போலும். (௫௬)

பெருமுயற்சியால் தேடப்பட்ட பொருள், (பிறருக்கு)க் கொடுப்பதனுல் அழிந்துவிடுகின்றது. ஆனுல் கல்விச்செல்வம் அவ்வாருவதில்லை. இது கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டேயிருக்கும். என்ன ஆச்சரியம்! (௫௭)

புராணங்களைக் கேட்பது, நல்லோர்களுடன் கூடியிருத்தல், சிவபூஜை, எக்காலமும் வேதாந்த விஷயங்களையே நன்கு சிந்தனைசெய்து அறிஞர்களுடன் சர்ச்சை செய்தல், இவையெல்லாம் துன்பங்களை வேருடன் களைந்துவிட வல்லன.

வேத விரதங்களில்லாத பிரம்மசரியாசிரமமும், மனையாட்டி இல்லாத இல்லறமும், வைராக்கியம் (அவாவறுத்தல்) இல்லாத துறவும் த்விஜர்களுக்குச் சிறப்புற்று விளங்காது. (௫௯)

நல்லொழுக்கமுள்ள ஒருவனுடைய வீட்டில் தீயவளான மனைவி அமைந்துவிட்டாளாயின், அவன் இவ்வுலகத்திலேயே நரகத்தில் வீழ்ந்தவனுவான். திண்ணம். (௬0)

कुचौ गोपय कञ्चुल्या सखि! मानोऽस्ति गोपने।
पश्य! भानौ स्थिते साक्षा ल्लोका देवालयादराः ॥ ६१ ॥

विद्याः सर्वा न शोभन्ते एकां सुकवितां विना।
यथा तु सुगुणा स्सर्वे परोपकरणं विना ॥ ६२ ॥

नदीभ्यो जल मायाति जलदैः पीयते सदा।
न सुखी च न दुःखी च गंभीरः सरितां पतिः ॥ ६३ ॥

नरो न स्तूयतां पद्यैः स्तूयतां परमेश्वरः।
सरलायाः सुवृत्तायाः कवितायाः फलं त्विदम् ॥ ६४ ॥

इति नीतिपद्धतिः ॥

கொங்கைகளைக் கச்சையினால் மறைத்துக்கொள். தோழீ! மறைத்து வைப்பதில் ஒரு பெருமை உண்டு. பார்! ஆதவன் பிரத்தியக்ஷமாயிருக்கையிலே மக்கள் கோவிலையே விரும்புகின்றனர். (௬௧)

நல்ல கவிதையொன்றில்லாவிடில் கற்ற கல்வியெல்லாம் சிறப்புற்று விளங்காது. இதற்கு ஒருதாகரணம்:-நற்குணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தாலும், பிறருக்கு உதவும் தன்மையில்லாவிடில் அவை பயனற்றவையே. (௬௨)

(சமுத்திரத்தில்) பல ஆறுகளினின்றும் தண்ணீர் பெருகி ஓடி வந்து சேருகின்றது. அதை நித்தமும் மேகங்கள் பருகுகின்றன. ஆனால், கடல், இந் நிகழ்ச்சிகளால் இன்பமும் அடைவதில்லை. துன்பமும் அடைவதில்லை. கம்பீரமாக (ஆழமாக)வே குழப்பமின்றிக்கே இருக்கின்றது. (௬௩)

இனிய கவிகளால் மானிடரைத் துதியாதீர். எல்லாம்வல்ல இறைவனையே துதிப்பீராக. ஸரளமான (எளிதில் பொருள் விளங்குமாறுள்ள)தும், நல்ல விருத்தங்களுடையதுமான (நல்லொழுக்கமுள்ள) கவிதைக்கு இதுவே பயன்.

நீதி பத்ததி முற்றும்.

अथ सज्जनपद्धतिः ॥

जिह्वावत्सज्जनः स्निग्धो द्विजमध्ये वसन् सदा ।
भुंक्ते सर्वरसान् हृद्या न्नैव स्नेहेन लिप्यते ॥ ६५ ॥

चन्दनं सुजनं मन्ये महागोत्रसमुद्भवम् ।
स्वगात्रं पेषयित्वापि परतापनिवारकम् ॥ ६६ ॥

ஸஜ்ஜன (சற்சன) பத்ததி

நல்லவர்கள் நாக்குபோன்றவர். இதற்குக் காரணம் யாதெனில்:— எப்பொழுதும் சிநேகம் (ஸ்நேஹம்) நிறைந்தவராக, த்விஜர்களின் நடுவில் வசிப்பது. மனத்துக்கினியதான ரஸங்கள் யாவற்றையும் அனுபவித்துக்கொண்டேயிருத்தல். அப்படியிருந்தாலும் சிநேகம் (ஸ்நேஹம்) ஒட்டாதவாறிருத்தல்.

குறிப்பு:— இந்த சுலோகத்தில் சிலேடையால் கருத்து உணர்த்தப்படுகின்றது. முதலில் "ஸ்நிக்த:" என்பதற்கு "சிநேகமுள்ளவன் என்று பொருள். இங்கு சிநேகம் எனப்படுவது எப்பொருளையும் ஒட்டிக்கொள்ளும் (ஈரமான) தன்மையையும் நட்பையும் உணர்த்தும். "த்விஜ" என்னும் சொல், பற்களையும் அந்தணர்களையுமுணர்த்தும். "ரஸம்" என்னும் சொல், உப்பு, புளிப்பு-முதலியவற்றையும் ச்ருங்காரம்-வீரம்-முதலிய காவிய ரஸங்களையும் உணர்த்தும். சிநேஹம் ஒட்டாதவாறிருத்தல் என்னுமிடத்தில் சிநேகம்-என்னும் சொல் பசையையும் பற்றுதலையும் குறிக்கும். முறையே முதலில் கூறியதெல்லாம் நாக்குக்கும், இரண்டாவதாகக் கூறியதெல்லாம் நல்லோர்க்கும் பொருந்தும். இவ்வழியில் இதன் கருத்தையுணரவேண்டும். (சூ௫)

சந்தனத்தை நல்லவனாக (சற்சனனாக) எண்ணுகிறேன். காரணம்? (1) மஹா கோத்திரத்தில் பிறந்தமை. (2) தன் சரீரத்தைத் தேய்த்துத் தேய்த்து அதன்மூலம் பிறருடைய தாபத்தைத் தீர்த்தல்.

குறிப்பு:— இதிலும் சிலேடை. மஹா கோத்திரம் என்பது பெரிய மலை, உயர்ந்த குலம் என இருபொருளுள்ள சொல். பிறருடைய தாபம் என்பது வெப்பத்தையும், ஏனைய துன்பங்களையும் உணர்த்தும். சந்தனக் கட்டையைத் தேய்த்துப் பிறர் தமது வெப்பத்தைத் தணித்துக்கொள்வர். சற்சனங்கள், தன் உடம்பு தேய உழைத்துப் பிறருடைய துன்பங்களை அகற்றுவர். இங்கும் முதலில் கூறிய பொருள் சந்தனத்துக்கும், இரண்டாவதாகக் கூறப்படும் பொருள் சற்சனங்களுக்கும் அமையும். தான் தேய்ந்துப் பிறர் தாபத்தைத்

ख्यातिं याति कुले कश्चि त्तेजसा यशसा श्रिया ।
दिवाकरस्यान्ववाये राम एव प्रपूज्यते ॥ ६७ ॥

गुणैस्तु पूज्यतां याति जाति स्त्र न कारणम् ।
कपिजातौ समुत्पन्नः पूज्यते हनुमान् जनैः ॥ ६८ ॥

नदीनां सज्जनानाञ्च महागोत्रसमुद्भवात् ।
जनाना मुपकाराय जीवनं सकलं सदा ॥ ६९ ॥

सद्वृक्षाणां सज्जनानां श्रिततापापहारिणाम् ।

தணிப்பது சந்தனக்கட்டையின் இயல்பு. அதனால் அது சிறிதும் வருந்துவதில்லை அவ்வாறே சற்சனங்களும் பிறரது துன்பங்களையகற்றுவதற்காகத் தாம் தேய்ந்து போவர். ஆனால் அதனால் சிறிதும் வருந்தமாட்டார்கள். இது அவர்களுடைய பிறவிக் குணம். இயற்கையிலமைந்தது, என்று இதுபோன்ற கருத்துக்கள் இங்கு ஊன்றியுணரற்பாலது. (௬௬)

ஒரு குலத்தில் பராக்கிரமத்தாலும், புகழாலும், செல்வத்தினாலும் பிரசித்தமாகிவிடுகின்றான் ஒருவன். (எல்லோரும் அவ்வாறாவதில்லை). சூரியனுடைய வம்சத்தில் பல்லாயிரக்கணக்கான அரசர்கள் பிறந்து நீதி வழுவாமல் பல்லாயிரம ண்டுகள் ஆட்சிபுரியவில்லையா? ஆனால் இராமன் ஒருவனே எல்லோராலும் பூஜிக்கப்படுகிறார் (௬௭)

குணங்களாலேயே ஒருவன் பூஜிக்கத் த குந்தவனாகின்றான். இதற்கு ஜாதியானது காரணமன்று. குரங்கினத்தில் பிறந்த அனுமான் ஜனங்களால் பூஜிக்கப்படுகிறார். (௬௮)

ஆறுகளும் நன்மக்களும் மஹா கோத்திரங்களிலேயே தோன்றுகின்றமையின், அந்நதிகளினுடையவும் நன்மக்களுடையவும் "ஜீவநம்" முழுவதும் எக்காலமும் மக்களின் உதவிக்காகவே அமைந்தது.

குறிப்பு :— இந்த சுலோகத்தில் 'மஹா கோத்ரம்' என்னும் சொல்லிலும் 'ஜீவனம்' என்னும் சொல்லிலும் சிலேடை. பெரிய மலைகள் — உயர்ந்த குலம் இவ்விரண்டுக்கும் 'மஹா கோத்திரம்' என்பது பெயர். தண்ணீருக்கும் – உயிர் வாழ்வதற்கும் 'ஜீவனம்' என்பது பெயராகும். இங்கும் முறையே முதல் பொருள் ஆறுகளுக்கும், இரண்டாம் பொருள் நன்மக்களுக்கும் பொருந்தும். (௬௯)

(நிழல் நிறைந்ததும் கனிகள் மிகுந்ததுமான) நல்ல மரங்களும் நன்

[1] येषान्तु सफलं जन्म परोपकृतये सदा ॥ ७० ॥

दुर्जनः साधुसंसर्गा दवाप्नोति शुभां मतिम् ।
निंब श्चन्दनतां याति संवासा न्मलयाचले ॥ ७१ ॥

उपकारं करोत्येव सुजनो दुर्बलोऽपि सन् ।
फलाभावा च्चन्दनस्तु कुरुते गात्रपेषणम् ॥ ७२ ॥

वसन्त! सन्तः सततं प्रार्थयन्ते त्वदागमम् ।
मंगलानां निदानं त्वं फलदः सर्वशाखिनाम् ॥ ७३ ॥

सज्जनः सेव्यतां नित्यं नीचानुसरणं वृथा ।
रसालसेकः सफलः पलाशे सलिलं वृथा ॥ ७४ ॥

மக்களும், தன்னையண்டியவர்களுடைய தாபத்தை அகற்றும் இயல்புள்ளன வாகலின், எப்பொழுதும் பிறருக்குதவி செய்வதற்காகவே அப்பிறவிகள் தோன்றுகின்றன. அவ்வாறான பிறவியே பயனுள்ளது. (எ0)

துர்ஜனனும் நல்லோருடைய சேர்க்கையினால் நன்மதியைப் பெறுகின்றான். வேப்பமரம் மலய மலையில் வஸிப்பதனால் சந்தனமரமாகிவிடுகின்றது. (எக)

நன்மக்கள், தாம் சக்தியற்றவராயிருப்பினும் பிறருக்குதவி செய்யாமலிரார். சந்தன மரத்தைப் பாருங்கள். தன்னிடம் கனிகளில்லையே என்னும் குறையினால் தன் உடம்பையே தேய்த்துப் பிறருக்குதவி செய்கின்றது. (எஉ)

இளவேனிற் பருவமே! நல்லோர்கள் உன் வரவை நித்தமும் விரும்புகின்றனர். ஏனெனில்; நீ மங்களங்களுக்கெல்லாம் ஆதிகாரணமாகின்றாய். எல்லா மரங்களும் உன் வரவால் கனிகள் நிறைந்தவையாகின்றன. (எங)

நித்தமும் நன்மக்களையே ஸேவிக்கவேண்டும். நீசர்களை (தாழ்ந்தவர்களை) அனுஸரிப்பது வீண். மாமரத்துக்குத் தண்ணீர் ஊற்றுவது பயனுள்ள செய்கை. பலாசமரத்துக்குத் தண்ணீர் ஊற்றுவது வீண். (எச)

---

1. ஏர்—என்று பாடமிருந்தால் ஸௌகர்யமாயிருக்கும் இந்த சுலோகம்:—

सद्वृक्षास्सज्जनाश्चैव श्रिततापापहारिणः । येषान्तु सफलं जन्म परोपकृतये सदा ॥

என்று இருக்கலாம். ஆனால் சுவடியில் இவ்வாறில்லை. பொதுவில் கருத்து மட்டும் ஒருவாறாக எழுதப்பட்டது.

स्वेन यद्वर्धितं, तत्तु न मज्जयति सज्जनः ।
काष्ठन्तु पादपा ज्ञात मिति तोयेन धार्यते ॥ ७५ ॥

वास स्त्वां सुजनं मन्ये सर्वलोकोपकारकम् ।
त्वदुत्पत्ति र्गुणमयी सर्वेषां गुह्यगुप्तये ॥ ७६ ॥

सज्जनानां नदीनां च मेघानां फलशाखिनाम् ।
सर्वेषा मुपकाराय जीवनं तापहारकम् ॥ ७७ ॥

खलाः सुमनसां संगात् प्राप्नुवन्ति सतां मतिम् ।
तिलसंस्थापितैः पुष्पै स्तैलै याति सुगंधता ॥ ७८ ॥

நன்மக்கள், தம்மால் வளர்க்கப்பட்ட பொருளை ஒருகாலும் தாழவிட மாட்டார்கள். மரத்தைத் தண்ணீர்தான் வளரச்செய்கிறது. அதனால் மரக் கட்டைகளைத் தண்ணீர், தன் மேற்புறத்திலேயே வைத்துத்தாங்குகின்றது.

வஸ்திரமே! (ஆடையே!) உன்னை சற்சனமென்று நினைக்கிறேன். ஏனெனில், நீ எல்லாவுலகத்தினருக்கும் உதவிபுரிகின்றாய். உனது தோற்றமே குணங்களில்தான். எல்லோருடையவும் இரகசிய(மான பாக)த்தைக் காப்பதே உனது தொழில்.

குறிப்பு:—இதிலும் சிலேடை. "குணமயீ" என்னுமிடத்தில் குணம் என்னும் சொல் ஆடை நெசவுக்கான நூல்களையும் நற்குணங்களையும் உணர்த்தும். அவ்வாறே 'குஹ்யம்' என்னும் சொல்லும் ஆண்—பெண் குறிகளையும் அவரவருடைய இரகசியமான வரலாற்றையும் குறிக்கும். முதலில் கூறிய பொருள் ஆடைக்கும், இரண்டாவது பொருள் சற்சனனுக்கும். (எசு)

சற்சனங்களுடையவும், ஆறுகளுடையவும், கார்முகில்களுடையவும், கனி நிறைந்த மரங்களுடையவும், 'ஜீவனம்" எல்லோருடையவும் தாபத்தைத் தொலைத்து உதவிசெய்ய வல்லது.

குறிப்பு:—இங்கும் சிலேடை. "ஜீவனம்" என்னும் ஒரே சொல், மேற்கூறிய நான்கு இனத்துக்கும் ஏற்றவாறு பொருள்படும். சற்சனங்கள் விஷயத்தில், உயிருடன் வாழ்தல் என்றும்; ஆறுகள்—மேகங்கள் இவற்றின் விஷயத்தில் தண்ணீர் என்றும்; கனிகளுள்ள நிழல் மரங்களின் விஷயத்தில் உயிர் வாழுதல் என்றும் தக்கவாறு பொருள் கொள்ளவேண்டும். அவ்வாறே, தாபம் என்னும் சொல்லும் சற்சனங்கள் விஷயத்தில் மனக் குழப்பத்தையும், ஆறுகள்—மேகங்கள்

महान्त एव महतां मानं कुर्वन्ति नेतरे ।
धत्ते शीर्षे शिव श्चन्द्रं राहु र्गलितु मिच्छति ॥ ७९ ॥

सन्मर्त्यानां सुमनसां जनामोदप्रदायिनाम् ।
वासो वा मूर्ध्नि लोकस्य वने वा शोषणं तथा ॥ ८० ॥

भार्या नुकूला तनयाश्च वश्याः
लक्ष्मीः स्थिरा नित्य मरोगता च ।
भक्तिः शिवे धर्मपरा च बुद्धिः
एतत्तु लभ्यं बहुपूर्वपुण्यैः ॥ ८१ ॥

इति सज्जनपद्धतिः ॥

—கனி மரங்கள் இவற்றின் விஷயத்தில் வெப்பம்—விடாய் இவற்றையும் உணர்த்தும். (எஎ)

துற்சனர்களும் நல்லோர்களுடைய சேர்க்கையினால் நல்ல அறிவைப் பெறுகின்றனர். எள்ளின் மேல் வைக்கப்பட்ட மலர்களால் எண்ணை நறுமணம் பெறுகின்றது. (எஅ)

பெரியோர்களைப் பெரியோர்களே போற்றுவர். ஈனர்கள் அல்ல. (ஈனர்கள் பெரியோர்களைப் மதிப்பரேயன்றி, போற்றார்) சந்திரனை, சிவபெருமான் தலையில் தாங்குகிறார். ஆனால் இராகு, விழுங்கிவிட முயற்சிக்கின்றான். (எகூ)

நன்மக்களும் நல்ல மலர்களும், மக்களுக்கு ஆமோதத்தை (மகிழ்ச்சியை—நறுமணத்தை)த் தருபவர்கள். அந்த நன்மக்களுக்கும், நறுமலர்கட்கும் இரண்டு விதமான இயல்பு உண்டு. ஒன்று:- உலகினரால் தலைமேல்தாங்கிப் போற்றப் படுதல். மற்றொன்று காட்டிலேயே உலர்ந்து மடிந்துவிடுதல். (அ௦)

ஒற்றுமையான மனமுள்ள மனைவியும், அடக்கமுள்ள பிள்ளைகளும், நிலைபெற்ற செல்வமும், நித்தமும் நோயற்ற வாழ்வும், சிவனிடத்தில் பக்தியும், தருமத்திலேயே ஊன்றிய சிந்தனையும், இவையெல்லாம் முற்பிறவிகளில் சேமித்து வைக்கப்பட்ட மாபெரும் புண்ணியத்தினாலேயே கிடைக்கக்கூடியவை. (அக)

சற்சன பத்ததி முற்றும்.

अथ दुर्जनपद्धतिः ॥

नीचो न मान्यते शश्वद्यावत्कार्यं तु मान्यते ।
गोमयस्य गणेशत्वं वर्तते स्नपनावधि ॥ ८२ ॥

नीचस्य महतो नाम स्थापितं चेत् फलं किमु? ।
भेकस्य वानरस्यापि वर्तते हरिनामता ॥ ८३ ॥

भेक! त्वां दुर्जनं मन्ये सदाजलनिवासिनम् ।
नानारवैः कटुतरैः रटन्तं श्रुतिदुःखदैः ॥ ८४ ॥

वृश्चिकस्य विषं पुच्छे दंष्ट्रायां भुजगस्य च ।
शीर्षे विषं मक्षिकायाः दुर्जनस्य मुखे विषम् ॥ ८५ ॥

शुद्धोऽप्यशुद्धतां याति तत्संपर्कात् क्षणेन तु ।
चंडालभाण्डे गांगन्तु श्रद्दतौ तु पयो यथा ॥ ८६ ॥

துர்ஜன (தீயொழுக்கினன்) பத்ததி.

நீசன் எக்காலத்தும் (ஸர்வகாலமும்) கொண்டாடப்படுவதில்லை. (அவனாலாகவேண்டிய) காரியம் கைகூடும் வரையில்தான் மதிக்கப்படுகின்றான். பசுஞ்சாணம் பிள்ளையாராகப் பூஜிக்கப்படுகின்றது ஸ்னபனம் (நீராட்டம்) வரை.

நீசனுக்குப் பெரியோர்களுடைய பெயர் வைக்கப்படுவதனால் பயன் என்ன? தவளைக்கும் குரங்குக்குங்கூட "ஹரி" என்னும் பெயருண்டு! (௮௩)

தவளையே! உன்னை துர்ஜனனாகவே எண்ணுகிறேன். ஏனெனில், நீ எப்பொழுதும் நீரில் (தீயவர்கள் குழாங்களில்) வஸிக்கிறாய். மேலும் செவியைத் துன்புறுத்துகின்ற பலவகைப்பட்ட கடுமையான சத்தங்களைத் தோற்றுவித்துக் கொண்டேயிருக்கின்றாய்.

குறிப்பு:— ஜடம் என்னும் சொல் சிலேடையால் தீயவன்–நீர் இரண்டையும் குறிக்கும். (௮௪)

தேளுக்கு விஷம் வாலில். பாம்புக்குப் பல்லில். ஈக்குத் தலையில் விஷம். துர்ஜனனுக்கு முகத்தில் விஷம். (௮௫)

அவனுடைய (தீய ஒழுக்கினனுடைய) சேர்க்கையால் நல்லொழுக்க

शुद्धः कलंकिसंपर्का दशुद्धिं याति तत्क्षणात् ।
गव्यं पय स्ताम्रपात्रसंयोगा न्मधुतां यथा ॥ ८७ ॥

सर्वदा तु जले वासः स्वीया नत्सि सुदुर्बलान् ।
तस्मा दकरुणं मत्स्य! हन्यसे त्वं जनै स्सदा ॥ ८८ ॥

बर्बूरं दुर्जनं मन्ये सर्वांगावृतकण्टकम् ।
तस्मा न्नास्ति फलप्राप्ती रुणद्धि फलदानपि ॥ ८९ ॥

संभाषणं न कर्तव्यं मद्यपेन बुधैः क्वचित् ।
दुर्गंधः पूर्वमायाति संवासा त्पातकं तथा ॥ ९० ॥

[1] दुर्गुणस्य च संवासात् गुणा दोषा भवन्ति हि ।

முடையவனும் ஒரு நொடியில் தீயவனாகிவிடுவான் கங்கை நீர் தூய்மையானது தான். ஆனால் சண்டாளனுடைய பாத்திரத்தில் வைக்கப்பட்டால்? அவ்வாறே ஆவின்பால் நாய்த்தோல் பையில் வைக்கப்படில்? அதுபோலவே இங்கும் கண்டுகொள்க. (அசு)

தூய்மையானவன் தீயவனுடைய சேர்க்கையினால் அந்த க்ஷணத்திலேயே கெட்டுப்போய்விடுவான், ஆவின்பால் செம்புப் பாத்திரத்தில் சேர்ந்தவுடன் கள்ளாகுமாறுபோல. (அஎ)

எப்பொழுதும் நீரில் (தீயவர் கூட்டத்தில்) வாசம் செய்கிறாய். வலிமை குன்றிய தன் இனத்தவரையே உண்கின்றாய். அதனால்தான் பச்சமே! நீ இரக்கமின்றி மக்களால் வதைக்கப்படுகிறாய். (அஅ)

உடல் முழுதும் முட்களால் (தீமையால்) மூடப்பெற்ற கருவேலமரத்தை (நான்) துர்ஜனனாகவே எண்ணுகிறேன். (ஏனெனில்) அதனின்றும் ஒரு பழத்தை(பயனை)யும் பெற இயலாது. (பயன்) பழம் கொடுக்கும் மற்ற மரங்களையும் (மற்றவர்களையும்) அது தடை செய்கின்றது. (அகூ)

அறிவுள்ளவன் ஒரு காலும் எங்கும் கள் குடிப்பவனோடு உரையாடக் கூடாது. (அவனிடமிருந்து) முதலில் துர்நாற்றம் வருகிறது. சகவாஸத்தால் பாதகமும் வீழ்ச்சியுறச் செய்யும் தீவினையும் தொடர்ந்து வருகிறது. (கூ0)

துர்ஜனனுடைய சகவாஸத்தினால் குணங்களும் தோஷமாகிவிடுகின்றன.

---

1. இது துர்ஜனபத்ததி ஆகையால் "दुर्जनस्य" என்றே இருத்தல் வேண்டும். "दुर्गुणस्य" என்பது எழுத்துப் பிழையாக இருக்கவேண்டும். ஆதலின் "दुर्जनस्य" என்பதையே வைத்துக்கொண்டு பொருள் எழுதப்பட்டது.

नदीनां रुचिदं तोयं सागरं प्राप्य दुष्यति ॥ ९१ ॥

दुर्जनानां वृश्चिकानां मक्षिकाणां च भोगिनाम् ।
परतापाय वै जन्म नान्यत्पश्यामि कारणम् ॥ ९२ ॥

अर्थहानि वृत्तभंगो ह्यपशब्दभयं तथा ।
न गण्यते कुकविभिः वेश्यासक्तै र्नरैरपि ॥ ९३ ॥

अलकाः पिशुनाश्चैव सदा स्नेहेन वर्धिताः ।
कौटिल्यं नैव मुञ्चन्ति मालिन्यं कृष्णवर्णताम् ॥ ९४ ॥

उपकारो हि नीचस्य कृतो द्वेषाय कल्पते ।
क्षीरं सर्पमुखे क्षिप्तं विषतां याति तत्क्षणात् ॥ ९५ ॥

ஆறுகளுடைய இனிமையான நீர் கடலில் கலந்ததும் கெட்டுவிடுகின்றது. (௯௧)

துர்ஜனங்களுடையவும் தேள், ஈ, பாம்புகள் இவற்றினுடையவும் பிறவி, பிறரைத் துன்புறுத்துவதற்காகவே ஏற்பட்டது. (இதன்றி) வேறு காரணம் காண்கின்றிலேன். (௯௨)

புன்கவிகளும், விலைமாதர்வயப்பட்ட மாந்தரும், அர்த்தஹானி, விருத்த பங்கம், அபசப்தபயம் இவற்றைக் கணிசிக்கமாட்டார்கள்.

அர்த்தம் – சொற்களுக்குத் தகுந்த பொருள். ஹானி – (அதன்) குறைவு. விருத்தம் – செய்யுளிலக்கணப் பொருத்தம். பங்கம் – (அதன்) சிதைவு. அபசப்தங்கள் – இலக்கணப்பிழையான சொற்கள். பயம் – (அவைகளை உபயோகிப்பதனாலுண்டான) அச்சம். இவற்றைப் புன்கவிகள் மதியார்கள்.

அர்த்தம் – பொருள் (பணம்). ஹானி – (அதன்) அழிவு. விருத்தம் – ஒழுக்கம். பங்கம் – (அதன்) கேடு. அபசப்தம் – கெட்ட பெயர். இவற்றை விலைமாதரிடம் பற்றுடையவர்கள் மதியார்கள். (சிலேடை) (௯௩)

அளகங் (முன்கூந்தல்) களும் கோட்சொல்பவர்களும், எப்பொழுதும் சினேகத்துடன் (எண்ணெய் தடவி – நட்புடன்) வளர்க்கப்படினும், கௌடில்யத்தை (நேர்மையற்ற நிலைமையை) யும், மாலின்யத்தை (அழுக்கடைந்த நிலையை – இழிவான சிந்தனையை) யும், கிருஷ்ண வர்ணத்தை (கறுமை நிறத்தை) யும் விடுவதே இல்லை. (௯௪)

நீசனுக்கு உதவிசெய்யப்படினும் அதுவே பகைமைக்குக் காரணமாகி

लोहं च खलचित्तञ्च कठिनं मलसंयुतम् ।
अमृते बहुधा क्षिप्तं मृदुत्वं नोपयाति हि! ॥ ९६ ॥

पायुवद् दुर्जनमुखं दुःशब्दं मलसंयुतम् ।
वारंवारं वारिणापि क्षालितं नैति शुद्धताम् ॥ ९७ ॥

सज्जनस्य गुणान् हित्वा खलः पश्यति दुर्गुणम् ।
वने वै सञ्चर न्नुष्ट्रो मार्गते कण्टकद्रुमम् ॥ ९८ ॥

वदान्या दल्पदातुश्च महानाडंबरः सदा ।
कांस्यपात्रे ध्वनि र्यादृक् न तादृक् स्वर्णभाजने ॥ ९९ ॥

कस्तूरी मृगनाभौ तु विधात्रा वै वृथा कृता ।
साचे त्पिशुनजिह्वायां कृता स्यात्पुण्यवा न्भवेत् ॥ १०० ॥

விடுகின்றது. பாம்பின் வாயில் வார்க்கப்பட்ட பால் அந்த க்ஷணத்திலேயே விஷமாக மாறிவிடுகின்றது. (௯௫)

உலோகமும் (இரும்பு முதலியது), துர்ஜனனுடைய மனமும் மிகக் கடினமானது. அழுக்கு நிறைந்தது. (அது) அமுதத்தில் (நீருள்) பலகாலும் போடப்பட்டாலும் மேன்மையையடைகிறதில்லை. (௯௬)

துர்ஜனனுடைய முகம் பாயு (ஆசனவாய்) போன்றது. அதில் எப்பொழுதும் கெடுதலான சத்தம் குடிகொண்டிருக்கும். மலம் நிறைந்திருக்கும். எவ்வளவுதரம் நீரால் கழுவப்படினும் சுத்தியை (தூய்மையை)ப் பெறுவதில்லை.

நன்மக்களுடைய நற்குணங்களைக் கழித்துவிட்டு இழிகுணங்களையே காண்பது நீசரது இயல்பு. காட்டில் திரிந்துகொண்டிருக்கும் ஒட்டகம், (நல்ல மரங்களைவிட்டு) முள் மரங்களையே தேடுகின்றது. (௯௮)

பெரும் கொடையாளியைக்காட்டிலும் அற்பமாகக் கொடுப்பவனுக்கே எப்பொழுதும் ஆடம்பரம் அதிகம். வெண்கலப் பாத்திரத்தில் எவ்வளவு ஒலி இருக்கின்றதோ அவ்வளவு பொன்கலத்தில் இல்லை. (௯௯)

மானின் நாபியில் பிரமதேவனால் கஸ்தூரி அமைக்கப்பட்டுள்ளது. இது வீண். அதையே கோட்சொல்பவனுடைய நாவில் அவர் அமைத்திருப்பாராயின் புண்ணியமுடையவராவார். (நறுமணமிக்க அப்பொருள் இங்குள்ள துர்நாற்றத்தைப் போக்குவதற்கு மிகவும் அவசியமென்றவாறு) (௱)

अहो! कनकदौरात्म्यं वर्णितुं कः क्षमो भवेत्?।
धुत्तूरः [1] स्वर्णनामत्वात् जनोन्मादकरः सदा ॥ १०१ ॥

निंबवृक्षे कटुकतां लशुने पूतिगंधिताम्।
दुर्जनेऽपि खलत्वं च मोक्तुं धातापि न क्षमः ॥ १०२ ॥

अंधव द्वीक्षते नान्यं मूकव न्नाभिभाषते।
अधिकारग्रहग्रस्तः शृणोति न वचो नृणाम् ॥ १०३ ॥

अहंकारः पिता नूत्नो जननी पूर्वविस्मृतिः।
अधिकारो नाम नृणां नूत्नानां नूतना जनिः ॥ १०४ ॥

त्वं साक्षा त्परमेश्वरोऽसि कमलानाथ स्त्वमेवात्मभूः
इत्येवं कवयः स्तुवन्ति कुविभुं कार्येषु दत्तादराः।

அந்தோ! பொன்னின் கெட்ட குணத்தை யாரே எடுத்துரைக்க வல்லார்? அதன் பெயரைத் தனக்கும் வைத்துக்கொண்டதினாலேயே ஊமத்தை, எல்லோரையும் எப்பொழுதும் பைத்தியமாக்கிவிடுகின்றதே! (ாக)

வேம்பின் கசப்பையும், பூண்டின் துர்நாற்றத்தையும், துர்ஜனனுடைய தீச்செயலையும் பிரமனும்கூட அகற்ற முடியாது. (ாஉ)

பிறவிக் குருடன்போல் பிறரைப் பார்க்கிறதில்லை. ஊமைபோல் (பிறருடன்) முகங்கொடுத்துப் பேசுவதில்லை. "அதிகாரம்" என்னும் க்ரஹத்தினால் (பிசாசினால்) பிடிக்கப்பட்டவன், பிறருடைய வார்த்தையையும் கேட்பதில்லை. (ாங)

அகங்காரம் (செருக்கு) தான் புதிய தந்தை. பழைய வரலாறுகளை அறவே மறந்துவிடும் தன்மை (மறதி) யே புதிய தாய். "புதுவகையான" மாந்தர்க்கு "அதிகாரம்" என்பது புதியதோர் பிறவியேயாகும். (ாச)

"நீயே ஸாக்ஷாத் பரமேச்வரன். திருமகள் கேள்வனும், படைக்கும் கடவுளாகிய பிரமனும் நீயேதான்" என்றிவ்வாறெல்லாம், தன் காரியத்தில் கருத்துக்கொண்ட கவிகள் அற்பமான பிரபுக்களை (வெகுவாக)ப் புகழ்ந்து பேசி

---

1. ஸம்ஸ்க்ருதத்தில் "கனகம்" என்பது, பொன்னுக்கும் ஊமத்தைக்கும் பொதுவான பெயர்.

श्रुत्वा तद्वचनानि मंदमतिमान् ध्यात्वा स्वकीयान् गुणान्
भालं पश्यति बाहुमूलमपि च स्वीयं मुखं पश्यति ॥ १०५ ॥

भोजने माक्षिकी बाधा, शयने मात्कुणी तथा ।
वसने मौषिकी बाधा, बाधा सर्वत्र दौर्जनी ॥ १०६ ॥

हित्वा चारुतमं सुधारससमं गव्यं पयः, सादरं
मद्यं हृद्यमिति प्रमत्तमनसः पापाः पिबन्त्यन्वहम् ।
त्यक्त्वा खण्ड मखण्डसान्द्ररुचिदं मत्ताः कलञ्जादराः
कृत्याकृत्यविचारणाविरहितं धिग्जन्म मन्दात्मनाम् ॥ १०७ ॥

कान्तिः शान्तिमतीव याति, धनितालोपः सदा जायते,
शीलं दूरतरं व्रजत्यपि महान्मोहः समुज्जृंभते ।

விடுகின்றனர். அற்ப அறிவுபடைத்த "அவன்" அவர்களுடைய அற்புதமான கவர்ச்சிகரமான சொற்களைக் கேட்டதும், (தன்னை மறந்து) தனது நற்குணங்களையெல்லாம் எண்ணியெண்ணி அகமகிழ்கின்றான். (தனது) நெற்றியைப் பார்த்துக்கொள்கிறான். தனது தோள்களையும் பார்க்கின்றான். தனது முகத்தையும் பார்த்துக்கொள்கிறான். (இவ்வாறு மாறிமாறிப் பார்த்துக்கொண்டு நிலைகொள்ளாமல் தவிக்கிறான் தனக்குற்ற பொய்ப் பெருமையை நினைந்து நினைந்து.)

உணவில் ஈயின் தொல்லை. படுக்கையில் மூட்டைப்பூச்சியின் தொல்லை. ஆடையில் எலிகளின் தொல்லை. எங்கும் எதிலும் துர்ஜனனுடைய தொல்லை.

அழகியது, அமுதம்போல் சுவைமிக்கது ஆவின்பால். அதைவிட்டு, மதம்பிடித்த மனமுடைய பாவிகள் "போதையைத் தருகின்ற கள்தான் என் மனத்துக்குப் பிடித்திருக்கின்றது" என்று (சொல்லிக்கொண்டு) பரிவுடன் தினந்தோறும் அதையே குடித்துக் கொண்டிருக்கின்றனர். இனிய சுவையைப் பெரும் அளவில் இடையறாது கொடுக்கவல்ல கற்கண்டைவிட்டு, மதி கலங்கியவர்கள் புகையிலையையே நாடுகின்றனர். "இது செய்யத் தகுந்தது. இது செய்யத் தகாதது" என்று பகுத்தறியும் ஆற்றலிழந்த அறிவீனர்களின் பிறவி, அந்தோ! இகழ்வானது.
(௱௭)

உடல் வனப்பு மிகமிகக் குறைந்துவிடுகின்றது. எப்போதும் பணம் இல்லாத கஷ்டம் வந்துவிடுகின்றது. நல்லொழுக்கம் வெகுதூரத்தில் சென்றுவிடுகின்றது. மோகம் (மயக்கம்) பெரிதாக வளர்ந்துகொண்டேயிருக்கின்றது.

चौर्यं वृद्धिमुपैति दुर्गुणगणः सर्वोऽपि तं सेवते,
किं किं वा नहि जायते ? बत ! नृणां वारांगनासंगिनाम् ॥ १०८ ॥

धिग्जन्म तस्यैव नराधमस्य यः पीडयत्यात्महिताय लोकम् ।
स एव धन्यः स्वहितं विहाय यः सर्वदा सर्वहितानुकांक्षी ॥ १०९ ॥

इति दुर्जनपद्धतिः ॥

களவு மேலும் மேலும் ஓங்கிவளர்கின்றது. இம்மட்டோ? இழிகுணங்கள் எல்லாம் தன்னடையே "அவனி"டம் வந்து சேருகின்றன. அந்தோ! விலைமாதரைக் கூடுபவனுக்கு எதெதுதான் வாராது? (௱அ)

எவன் தனது நன்மைக்காக (ப்பிறரை) உலகத்தைத் துன்புறுத்துகின்றானோ, அந்த நராதமனுடைய (கயவனுடைய) பிறவியே மிகவும் இழிவானது. எவன் தனது நன்மையைப் புறக்கணித்து, எப்பொழுதும் மற்றெல்லோருடையவும் நன்மையையே நாடுகின்றானோ, அவனே பாக்கியசாலி. (௱௯)

துர்ஜன (தீயொழுக்கினன்) பத்ததி முற்றும்.

॥ अथ सामान्यपद्धतिः ॥

ये गुणाः सन्ति मनुजे प्रकाशं यान्ति ते स्वयम् ।
आमोदेन विजानन्ति कस्तूरीं केतकीं जनाः ॥ ११० ॥

यस्य वर्णस्य यत्सत्त्वं तं वर्ण मनुगच्छति ।
कृष्णवर्णः कोकिलस्तु पञ्चमं कूजति स्वरम् ॥ १११ ॥

नीचो जनः स्वसामर्थ्यात् प्राप्नोति महतीं श्रियम् ।
पाषाणो रत्नतां याति तेजसा स्वेन शोभिना ॥ ११२ ॥

तांबूल! भवते युक्तं द्विजान् रक्तान् करोषि यत् ।
अधरं कुरुषे रक्त मयुक्तं प्रतिभाति तत् ॥ ११३ ॥

अशुद्धं शुद्धतां याति केनचित्कारणेन हि ।
निन्द्या नीली पट्टसूत्रे कंबले याति शुद्धताम् ॥ ११४ ॥

ஸாமான்ய (பொதுவான) பத்ததி.

மனிதனிடத்தில் இயற்கையில் அமைந்த குணங்கள் தானாகவே பிரகாசிக்கும். கஸ்தூரியையும் தாழம்பூவையும் அவற்றின் நறுமணத்தினாலேயே மக்கள் அறிகின்றனர். (௱௰)

எந்த நிறத்திற்கு எது சுபாவமோ, அது எங்கும் அதைத்தொடர்ந்து வரும். கறுமை நிறமான குயில் பஞ்சம ஸ்வரத்தையே கூவுகின்றது. (௱௰௧)

தாழ்ந்தவனும் தனது சாமர்த்தியத்தினால் பெரும் செல்வத்தைப் பெறுவான். தனது அழகிய ஒளியினால் கல்லும் இரத்தினமாகிவிடுகின்றது.

வெற்றிலையே! நீ பற்களை (அந்தணர்களை)ச் செந்நிறமாக்குகின்றாய். (ஆசையுள்ளவர்களாகச் செய்கின்றாய்) அது தகும். ஆனால் கீழ் உதட்டை (தாழ்ந்தவனை)ச் செந்நிறமாக (ஆசையுள்ளவனாக)ச் செய்கின்றாயே, அதுதான் பொருத்தமாகத் தோன்றவில்லை. (௱௰௩)

அசுத்தமான பொருளும் ஒரு காரணத்தால் தூய்மையை அடைகின்றது. பட்டு நூலில் நிந்திக்கப்படும் நீலிச்சாயம் கம்பளத்தில் சுத்தமாகிவிடுகின்றது.

न निन्द्यते स्वकं कर्म दैवं मूर्खेण निन्द्यते ।
कंचुके दोषमाधत्ते नारी निपतितस्तनी ॥ ११५ ॥

यथायोग्यं फलं धाता ददाति सततं नृणाम् ।
निंबवृक्षफलं भोक्तुं काक एव विनिर्मितः ॥ ११६ ॥

जिह्वालौल्यं न कर्तव्यं भोक्तव्य स्वायतिक्षमम् ।
गळमांसाशना न्मत्स्यः पञ्चत्वं याति तत्क्षणात् ॥ ११७ ॥

बंधा बहुविधा स्सन्ति प्रेमबंधो दुरत्ययः ।
शिलीमुखः पद्मबंधे निष्क्रियो जायते निशि ॥ ११८ ॥

सुगुणाः सन्ति मनुजे वर्तन्ते दुर्गुणा अपि ।
संग्राह्य श्चेद्गुणा ग्राह्या स्त्याज्य श्चेद्दुर्गुणा बुधैः ॥ ११९ ॥

स्वाकृते रपि मर्त्यस्य मुखं नो भात्यनक्षरम् ।

மூர்க்கன் தனது தீச்செயலை இகழ்வதில்லை. தைவத்தையே குறை கூறுகின்றான். தனது கொங்கைகள் சரிந்து விழப்பெற்ற பெண், ரவிக்கையின்மேல் குற்றம் சுமத்துகின்றாள். (௱௰௫)

மானிடர்க்கு, அவரவரது தகுதிக்கேற்றவாறு பிரமன் பயனளித்து வருகிறார். வேப்பமரத்தின் பழத்தைப் புசிப்பதற்குக் காகம்தான் படைக்கப்பட்டுள்ளது.

நாக்கில் சபலத்தன்மை கூடாது. நீண்டகாலம் நிலைத்துநிற்கும்படியான உணவையே உட்கொள்ள வேண்டும். கன்னத்தின் மாம்ஸத்தை உண்பதனால் மச்சம் அந்த நிமிடத்திலேயே இறந்துவிடுகின்றது. (௱௰௭)

கட்டுகள் பலவகையானவை. (அவற்றுள்) அன்பாகிய கட்டு மீற முடியாதது. இராக்காலத்தில் தாமரை மலருள் கட்டுப்பட்டுள்ள வண்டு செயலற்றுக்கிடக்கின்றது. (௱௰௮)

மனிதனிடம் நல்ல குணங்களும் இருக்கின்றன. தீய குணங்களும் இருக்கின்றன. ஒருவனை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தால் நற்குணங்களையே கவனித்தல் வேண்டும். கைவிட வேண்டியிருந்தால் தீய குணங்களைக் கவனிக்க வேண்டும். இதுவே அறிவாளிகளின் செயல். (௱௰௯)

ஒருவன் எவ்வளவுதான் அழகுமிக்கிருந்தாலும் எழுத்தறிவின்மையால்

वितन्तोः केशशालिन्याः शरीरे भूषणं यथा ॥ १२० ॥

एका विद्या विनैश्वर्यं शोभते नहि मान्यते ।
सुरूपाया यथा गात्रं सुवस्त्राभरणं विना ॥ १२१ ॥

ज्ञानं न शोभते सम्यक् यथोक्ताचरणं विना ।
यथावकेशिनः पुष्पं राजते न फलं विना ॥ १२२ ॥

नरस्तु पूज्यतां याति कलया निष्कलंकया ।
निष्कलंककल श्चन्द्रो वन्द्यते न मृगांकवान् ॥ १२३ ॥

गुणा एव हि पूज्यन्ते पटाटोपैः फलं नहि ।
गवां मूल्यं पयो दृष्ट्वा, न तु घण्टागणैः क्वचित् ॥ १२४ ॥

अत्यानुकूल्ये दैवेऽपि प्रयत्नाल्लभ्यते फलम् ।
काष्ठा दग्नि स्तिला त्तैलं मौक्तिकानि सरित्पतेः ॥ १२५ ॥

(கல்வி வாசனையின்மையால், அவனுடைய முகம் சோபிக்கிறதில்லை; அழகிய கூந்தல் நிறைந்த கைம்பெண்ணுடைய உடப்பில் ஆபரணங்கள்போல். (௱௨௰)

கல்வி ஒன்று தான் செல்வமில்லாவிடினும் சோபிக்கும். ஆனால் போற்றப் படாது. சிறந்த கட்டழகியின் உடல், நல்ல ஆடையலங்காரம் இல்லாத நிலையில் போல். (௱௨௧)

நல்லொழுக்கமற்றவனுடைய அறிவு சோபிக்காது, கனியற்ற மரத்தின் பூப்போல

ப
"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

—திருக்குறள். (௱௨௨)

களங்கமற்ற கலையினால் மனிதன் போற்றப்படுகின்றான். களங்கமற்ற கலையுடன்கூடிய நிலையிலேயே (மூன்றாம்பிறை) சந்திரன் வணங்கப்படுகின்றான். மிருகப்(மான்)போன்ற வடிவமுள்ள களங்கம் தெளிவாகப் புலனாகும் நிலைமையில் அல்ல. (௱௨௩)

நற்குணங்களே மதிப்புக்குக் காரணம். வீண் ஆடம்பரங்களால் பயனொன்றுமில்லை பசுமாட்டின் விலை, அது கொடுக்கும் பாலைப்பார்த்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. அதன் கழுத்தில் தொங்கும் மணிகளைப் பார்த்தல்ல.

தைவம் மிகவும் அநுகூலமாகவிருப்பினும், (ஒருவன்) தன் முயற்சியினாலேயே பயன் பெறுகின்றான். விறகினின்று நெருப்பு, எள்ளினின்று எண்ணெய்,

महता यत्कृतं तत्तु मान्यते सर्वदा जनैः ।
शिवेन धूर्तः शिरसा शशिना सह धार्यते ॥ १२६ ॥

महतो नाम सदृशी वर्तते सफला क्रिया ।
सर्वंसहेति धात्रीति पृथिवी कथ्यते जनैः ॥ १२७ ॥

सुखिनोऽनुसृतिं सर्वे कुर्वन्त्येव हि बांधवाः ।
दुःखे प्राप्ते दुःख भागी न भवत्येव बांधवः ॥ १२८ ॥

क्षीरोदधेश्च ते जन्म भर्ता ते पुरुषोत्तमः ।
लोकमातेति ते नाम नीचानुसरणं त्यज ॥ १२९ ॥

सुरूपं सुकुलं विद्या मतिचार्य गुणानपि ।
लोला लक्ष्मीः स्वैरिणीव कुनरं याति कामिनी ॥ १३० ॥

கடலினின்று முத்து, இவை தெய்வத்தின் படைப்பேயாயினும் முயற்சியற்றவனுக்குக் கிட்டா. (௱௨௫)

பெரியோர் ஒன்றைச் செய்துவிட்டால், மக்கள் யாவரும் அதை எப்பொழுதும் மதிக்கின்றனர். சிவபெருமான், தன் தலையில் பிறைச் சந்திரனுடன் கூடவே ஊமத்தையையும் தரிக்கின்றார். (இங்கு தூர்த்தன் என்பது சிலேடையால் தீயோனையும் குறிக்கும்.) (௱௨௬)

பெரியோர்களின் பெயருக்கேற்றதாகவே அவர்களது செயலும் அமைகின்றது. "ஸர்வம்ஸஹா" எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்பவள், "தாத்ரீ" எல்லாவற்றையும் தரிப்பவள், என்று பூமியை மக்கள் வழங்குகின்றனர். (௱௨௭)

சுகமாக வாழ்பவனை உறவினர் யாவரும் அனுசரிக்கின்றனர். (அவனுடைய சுகத்தில் பங்கு கொள்கின்றனர்.) துன்பம் வந்திடின் ஒரு உறவினனும் அதில் பங்கு கொள்வதே இல்லை. (௱௨௮)

(மகாலக்ஷ்மி!) நீ பாற்கடலில் தோன்றியவள். உன் கணவனே புருஷோத்தமன் (புருஷர்களுள் சிறந்தவன்). உலகங்கட்கெல்லாம் தாய் (லோகமாதா) என்பது உன் பெயர். (நீ) நீசர்களைச் சென்றடையும் வழக்கத்தை விட்டுவிடு. (௱௨௯)

நல்ல வடிவழகு, உயர்ந்த குலம், சிறந்த கல்வி, எண்ணற்கரிய நற்குணங்கள், இதொன்றையும் மதியாமல் சபல புத்தியுள்ள லக்ஷ்மியானவள்,

लोकमाता रमेऽसि त्वं लोकमाताऽपि ते पतिः ।
लोकजेतापि ते पुत्रो लोकेऽस्मिन् दुर्जनं त्यज ॥ १३१ ॥

मातुलिंगे गुणाः के वा? न माधुर्यं न चाम्लता ।
महालक्ष्म्या धृतं हस्ते तस्मा न्मान्यतमं सदा ॥ १३२ ॥

धनिनं गुणिनं मन्ये निर्धनं दुर्गुणान्वितम् ।
धनिनं सुगुणा यान्ति निर्धनो नावलोक्यते ॥ १३३ ॥

सधनोऽपि नरो भुंक्ते निर्धनो भुंक्त एव हि ।
अन्नं दत्वा धनी भुंक्ते गत्वा भुंक्ते तु निर्धनः ॥ १३४ ॥

दारिद्र्यं रुग्णता क्रोधः कार्पण्यमसुखं सदा ।
पतनं निरये चान्ते पापवर्ग उदाहृतः ॥ १३५ ॥

காமவேட்கை கொண்ட விபசாரிணிபோல் அற்பமனிதனையே சென்று அடைகின்றாள். (௱௩௰)

மகாலக்ஷ்மி! நீ உலகமாதாவாகின்றாய் உன் கணவனும் உலகமாதாவாக (உலகளந்தவனாக)வே அமைந்தான். உன் மகனோ உலகங்களை யெல்லாம் வென்றவன் (மன்மதன்). உலகிலுள்ள துர்ஜனங்களை (இவ்வளவு பெருமைகள் படைத்த) நீ விட்டுவிடு. (௱௩௧)

மாதுளம் பழத்தில் என்ன குணங்கள் உள்ளன? இனிப்புமில்லை புளிப்புமில்லை. மஹாலக்ஷ்மி அதைக் கையில் வைத்திருக்கிறாள்! அதனால் அது என்றும் எங்கும் போற்றப்படுகின்றது. (௱௩௨)

செல்வவந்தனே நற்குணங்கள் நிறைந்தவன். ஏழையிடத்தில் தீய குணங்களே நிரம்பியுள்ளன. உலகமறிந்த மறுக்கமுடியாத உண்மை இதுவே. பணக்காரனை நற்குணங்களெல்லாம் தேடிச்சென்றடைகின்றன. ஏழையைக் கண்கொண்டு பார்ப்பவர் இல்லை. (௱௩௩)

பணக்காரனும் உண்கின்றான். ஏழையும் உண்ணாமலிருப்பதில்லை. (பிறருக்கு) அன்னமிட்டுத்தான் உண்கின்றான் பணக்காரன். ஏழையோவெனில், (அவ்வாறு உணவு கொடுக்கப்படுமிடத்திற்குச்) சென்று உண்கின்றான். (௱௩௪)

வறுமை, நோய்கள், சினம், எளிமை, சுகமின்மை, முடிவில் நரகத்தில் விழுதல், இது தீவினையின் வரிசை (௱௩௫)

भाग्य मारोग्य मक्रोधः औदार्यं सन्मतिः सुखम् ।
स्वर्लोकगमनं चान्ते पुण्यवर्ग उदाहृतः ॥ १३६ ॥

वारस्त्रीषु कुलस्त्रीषु गात्रभेदो न विद्यते ।
निर्लज्जाचे द्वारयोषित् सलज्जाचे त्कुलांगना ॥ १३७ ॥

स्वतः शुद्धा सज्जनानां दुष्टानां कुटिला मतिः ।
माकन्दी शीतला च्छाया बार्बुरी कण्टकावृता ॥ १३८ ॥

सीमन्तिन्यो विपुष्पाश्च काननेषु च या लताः ।
निष्फला नैव शोभन्ते नास्ति ताभ्यः फलोदयः ॥ १३९ ॥

सेवा निष्फलतां व्रजत्यपि महान्यत्नोऽप्यकिंचित्करो
याञ्चा दैन्यफलप्रदा सुघटितं सञ्जायते दुर्घटम् ।
बुद्धि र्मान्द्य मुपैति बंधुजनता मुंचत्यहो! बंधुतां
कालश्चे त्प्रातिकूलभाव मयते, कालानुरूपं जगत् ॥ १४० ॥

செல்வம், நோயற்ற வாழ்வு, கோபமின்மை (சாந்தம்), தாராளமான தன்மை, நல்ல புத்தி, சுகம், முடிவில் சுவர்க்கலோகம் செல்லுதல், இவை புண்ணியத்தின் வரிசையாம். இவ்விரண்டு வகைகளிலும், முதலில் உள்ள ஒவ்வொன்றும் அடுத்தாற்போலுள்ளதைத் தோற்றுவிக்குமென்றபடி. (௱௩௬)

விலை மாதருக்கும் குல மடந்தையர்க்கும் உடலமைப்பில் வாசியில்லை. நாணமில்லாதிருப்பாளாயின் விலை மாது என்றும், நாணமுள்ளவளாயின் குல ஸ்த்ரீயென்று மறிக. (௱௩௭)

இயற்கையாகவே தூய்மையானது நன் மக்களின் மதி. இயற்கையாகவே கோணலானது தீயோர்களின் புத்தி. மாமரத்து நிழல் குளிர்ச்சியாகவிருக்கின்றது. (யாவருக்கும் பயன்படுகின்றது.) பர்பூர மரத்தின் நிழலோவெனில் முட்கள் நிறைந்துள்ளது. (௱௩௮)

(வீடுகளில்) புஷ்பமில்லாத (மாதவிடாய் இல்லாத) பெண்களும், காடுகளில் மலரில்லாத கொடிகளும் நிஷ்பலமாயிருத்தலின் (பயனற்ற தன்மை - பழம் தராமையின்) சோபிக்கிறதில்லை. பூக்காத கொடி பழம் தராது. ருதுவாகாத பெண்ணுக்கு மக்கள் தோன்ரு. (௱௩௯)

சேவைத்தொழில் பயனற்றதாகிவிடுகின்றது. பெருமுயற்சியும் வீணாகி

किं वा सुखं नान्वभूवं दुःसहं दुःखमेव वा ।
सर्वं कालकृतं बुध्वा न हृष्यामि न च व्यथे ॥ १४१ ॥

महतामपि मान्यानां स्वर्णस्याशा गरीयसी ।
शिवोऽपि शिरसा धत्ते धुत्तूरं कनकाह्वयम् ॥ १४२ ॥

सुवर्ण! तव माहात्म्यं वक्तुं शेषोऽपि न क्षमः ।
यतस्त्वया जगदिदं मायया स्ववशीकृतम् ॥ १४३ ॥

देवानां त्वं मुखं वह्ने! तेषां हव्यं ददासि च ।
जातवेदास्त्वमसि वै युक्ता किं सर्वभक्षता? ॥ १४४ ॥

விடுகின்றது. யாசிப்பதனால் எளிமை வெளியாகின்றதேயன்றி வேறொரு பயனுமில்லை. நன்கு கைகூடியதெல்லாம் கிட்டாததாகிவிடுகின்றது. அறிவு மழுங்குகின்றது. உறவினர் யாவரும் தத்தம் உறவு முறையை விட்டுவிடுகின்றனர். கெட்டகாலம் வந்தால் இவ்வாறெல்லாம் பெரும் விபரீதங்கள் நிகழ்கின்றன. அந்தோ! இவ்வுலகமே காலத்திற்கேற்றவாறுத் தனது இயல்பை மாற்றிக் கொள்கின்றது. (௱௪௰)

எல்லா வகையான சுகங்களையும் அனுபவித்தாயிற்று. அவ்வாறே பல வகையான பொறுக்க முடியாத துன்பங்களையும் ஒன்றுவிடாமல் அனுபவித்தாயிற்று. ஆனால் எல்லாம் காலத்தின் செயல் என்பதை நான் நன்கறிவேன். அதனால் எனக்குச் சந்தோஷமுமில்லை. துயரமுமில்லை. (௱௪௧)

உலகம் போற்றும் உத்தமர்கட்கும் பொன்னாசை பெரிது. பொன்னின் பெயராகிய "கனகம்" என்பதை தனக்கும் பெயராகப் பெற்றுள்ளது ஊமத்தை. அதனால் சிவபெருமானும் அதைத் தலையில் தரிக்கின்றார். (௱௪௨)

பொன்னே! உன் மகிமையை ஆதிசேஷனாலும் எடுத்துக்கூற இயலாது. ஏனெனில் இவ்வுலகம் முழுதும் உன்னால் மயக்கித் தன்வசப் படுத்தப்பட்டுள்ளது.

அக்கினியே! நீ தேவர்களின் முகமாகின்றாய். மேலும் அவர்களுக்கு அவியுணவையும் (சுமந்து சென்று) கொடுக்கின்றாய். [1] "ஜாதவேதஸ்" என்னும்

---

1. இந்தப் பெயருக்குப் பொருள்கள் பலவுள; தோன்றும் பொருள்கள் யாவற்றையும் அவ்வப்போது அறிந்து கொள்பவன்; தோன்றும் பிராணிகள் யாவற்றாலும் அறியப்படுகின்றவன். தோன்றும் பொருள் யாவற்றிலும் இருப்பவன். செல்வம் கல்வி இவற்றில் சிறந்தவன். நுண்ணறிவு படைத்தவன், என்றிவ்வாறு நிருக்தத்தில் கூறப்பட்டவை,

तथावतारा दैत्यारे! गृहीता धर्मसिद्धये ।
बौद्धावतारग्रहणे को वा धर्मो विनिश्चितः ? ॥ १४५ ॥

अबद्धं पुस्तकं, भार्या दुःशीला, तनयो जडः ।
रुग्णः कायः, शठं मित्रं, दुःखदानि सदा नृणाम् ॥ १४६ ॥

कामः संकोच मायाति दृष्ट्वा स्त्रीश्वेतमूर्धजान् ।
वैनतेयमुखं दृष्ट्वा भुजंगस्य फणो यथा ॥ १४७ ॥

अन्तः कठोरहृदया बहिः स्नेहाभिलाषिणी ।
वारकान्तेव भात्येषा पुरस्ता त्सालभञ्जिका ॥ १४८ ॥

स्वामी गुणज्ञः सकलार्थदाता, भार्या सुरूपा च सुशीलवृत्ता ।
पुत्रः कलावान् पितृभक्तियुक्तः, त्रीण्येव रत्नानि भवांबुराशौ ॥

इति सामान्यपद्धतिः ॥

பெயர் பெற்றிருக்கின்றாய். (இவ்வாறான உனக்கு) வரையறையில்லாமல் எதையும் உண்ணுதல் தகுமோ? (௱௪௪)

திருமாலே! உமது அவதாரங்கள் தருமத்தை நிலைநாட்டுவதற்காகவே நிகழ்ந்தவை. (அவ்வாறிருக்க) புத்தராக அவதரித்தது எந்த தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவோ? (௱௪௫)

பிழை மிகுந்த நூல், கெட்ட சுபாவமுள்ள மனைவி, மூடனான மகன், நோய்கள் மிகுந்த உடம்பு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நண்பன், இவை எப்போதும் மானிடர்க்குத் துன்பத்தைத்தருவன. (௱௪௬)

பெண்களுடைய வெண்மையான தலைமயிர்களைக் கண்டமாத்திரத்தில் காமம் சுருங்கிவிடுகின்றது, கருடனுடைய முகத்தைக் கண்டவுடன் பாம்பின் படம் சுருங்குவதுபோல. (௱௪௭)

உள்ளே கடினமான இதயம் (மனம்). வெளியிலோவெனில், பாசம், ஆவல் மிகுந்து காணப்படும். இதுவே விலைமாதரின் இயல்பு. உட்புறம் கடினமான அமைப்புள்ள பொம்மை, மேற்புறத்தில் வழுவழுப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் அமைந்திருக்கும். இவ்வழியில் விலைமாதரும் பொம்மைகளும் ஒற்றுமையானவை. (௱௪௮)

எஜமானன் குணமறிந்தவன், வேண்டிய பொருளெல்லாம் தருபவன்.

अथान्योक्तिपद्धतिः ॥

सूर्यस्य—

किं वा खद्योतनक्षत्रग्रहचन्द्रादिभिः फलम् ?
उदितो विश्वचक्षुश्चेत् ध्वान्तं नश्यति तत्क्षणात् ॥ १५० ॥

स्वयं धामनिधिः सूर्यो जगच्चक्षु र्दिवाकरः ।
सुरोत्तमत्वं स्वगुणैः प्राप्तवान् लोकबांधवः ॥१५१ ॥

चन्द्रस्य—

स्वयं कलानिधि श्चन्द्रो बुधाना ममृतप्रदः ।
सदा सन्मार्गचारी च तेनाप्तो द्विजराजताम् ॥ १५२ ॥

மனைவியோ! சிறந்த கட்டழகி, நல்ல ஸ்வபாவம் நல்லொழுக்கமுள்ளவள். மகனோ! கலைகளைக் கசடறக் கற்றவன், தந்தையிடம் மிகுந்த பக்தியுள்ளவன். பிறவிப் பெருங்கடலில் இம் மூன்றே இரத்தினங்கள்தான் உள்ளன. (௱௪௯)

ஸாமான்ய பத்ததி முற்றும்

—— ——

*அன்யோக்தி பத்ததி

சூரியனுக்கு :—

மின்மினிப்பூச்சிகள், நட்சத்திரங்கள், கிரகங்கள், சந்திரன் இது போன்றவைகளால் யாது பயன்? உலகங்கட்கெல்லாம் ஒரே கண்ணாகிய கதிரவன் தோன்றினால் அந்த க்ஷணத்திலேயே இருள் அழிந்துவிடுகின்றது. (௱௫௦)

சூரியன் தானே ஒளிப்பிழம்பானவன். உலகங்கட்குக் கண்ணானவன். பகலைச்செய்கின்றவன். உலகங்களின் உறவினன். (இது போன்ற) தனது நற்குணங்களாலேயே அவன் தேவர்களுள் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்துள்ளான்.

சந்திரனுக்கு :—

சந்திரன், தானே கலைகளுக்கு நிதி (புதையல்) ஆக இருப்பவன். தேவர்களுக்கு அமுதத்தைத் தருபவன். எப்பொழுதும் (நல் வழியிலேயே) நட்சத்திர மார்க்கத்திலேயே சஞ்சரிப்பவன். அதனால் அந்தணர்கட்குத்தலைவனாகிவிட்டான்.

---

* அன்ய–பிற பொருளை, உக்தி–பேசுதல். பேசவேண்டிய **விஷயத்தைப்** பேசாமல் விடுத்து, வேறு விஷயத்தைப் பேசுதல் என்பது பொருள். அவ்வாறு பேசப்படும் வேறு விஷயம் ரஸமாகவும், வெகு சாமர்த்தியமாகவும் முக்கியமான விஷயத்தை உணர்த்திவிடும். இது கவிதையில் ஒரு சிறந்த சாதனை. இங்கு அவ்வாறு தோன்றும் முக்கியமான விஷயங்களைத் தக்கவாறு அவரவர் ஊகித்துக்கொள்க.

कलंक्यपि सतां सङ्गात् सिद्धि माप्नोति शाश्वतीम् ।
यथा दोषाकर श्चन्द्रो द्विजराजत्व माप्तवान् ॥ १५३ ॥

सत्स्वपि स्वेषु दारेषु परदाररति र्जडः ।
अनेकताराभर्तापि तारां प्रार्थितवान् शशी ॥ १५४ ॥

समुद्रस्यः—

त्वज्जीवनं जलनिधे! जनानां नोपकारकम् ।
पांथः स्वादूदकं कूपं तृषार्तः परिमार्गते ॥ १५५ ॥

जलदस्य—

जलद! त्वं जलनिधौ वृथा वर्षसि, तेन किम् ?
तृषार्तचातकमुखं पूरयस्व यश स्तव ॥ १५६ ॥

குறிப்பு :— கலைகள் – அறுபத்து நான்கு கலைகள், சந்திரனில் தேய்ந்து வளரும் பதினாறு கலைகள். புதர்கள் – தேவர்கள், அந்தணர்கள். ஸன்மார்கம்– நல்வழி, நட்சத்திரமண்டலம். சிலேடை. (௱௫௨)

களங்கமுள்ளவனும் (குற்றமுள்ளவனும்) நட்சத்திரங்களுடைய (நல்லோர்களுடைய) சேர்க்கையினால் நிலைநின்ற சித்தியைப் பெற்றுவிடுகின்றான். தோஷாகரனாகிய (தோஷங்கள் – குற்றங்கள், அவற்றுக்கு இருப்பிடமானவன். தோஷா – இரவு. அதில் ஒளியுடன் பிரகாசிப்பவன் சிலேடை) சந்திரன் அந்தணர்க்கரசனாகிவிட்டதுபோல. (௱௫௩)

தனது மனைவியிருக்கையிலேயே மூடன் பிறர் மனைவியை ஆசைப்படுகின்றான். எண்ணிறந்த தாரைகட்குக் கணவனாகவிருந்தும், சந்திரன் தாரையை விரும்பினானல்லவா ? தாரா – நட்சத்திரங்கள், பிருஹஸ்பதியின் மனைவி- சிலேடை. சந்திரனை நட்சத்திரங்களுக்குக் கணவனாகவும், அவற்றைச் சந்திரனுக்கு மனைவியராகவும் (தாரா என்னும் சொல் பெண்பாலானமைபற்றி) கூறுதல் கவிகள் மரபு. (௱௫௪)

கடலுக்கு ;—

கடலே! உனது ஜீவனம் (பிழைத்திருத்தல், நீர், சிலேடை) ஜனங்களுக்கு உதவுகின்றதில்லை. விடாய் மிகுந்த வழிப்போக்கன் இனிமையான தண்ணீருள்ள கிணற்றையே தேடியலைகின்றான். (௱௫௫)

முகிலுக்கு :—

கார்முகிலே! நீ கடலில் வீணாக மழையைப் பொழிகின்றாய். அதனால் யாது பயன் ? தாகத்தினால் வாடுகின்ற சாதகத்தின் முகத்தை நிரப்பினையாகில்

जलस्य संग्रहं कुर्वन्नब्धिर्याति रसातलम् ।
जलदस्तु जलं दत्वा लोकमूर्धसु गर्जति ॥ १५७ ॥

जलस्य—
जल ! त्वयि गुणा हृद्याः दोषोऽप्यास्ति महानयम् ।
येन वर्णेन संयासि यासि तद्वर्णतां क्षणात् ॥ १५८ ॥

तव नीर ! गुणा स्सर्वे दोषेणैकेन निर्जिताः ।
यतः शुद्धमपि त्वं हि नीचमार्गेण गच्छसि ॥ १५९ ॥

नीरन्तु सुजनं मन्ये सर्वजीवदयापरम् ।
परतापं न सहते यावज्जीवं स्वशक्तितः ॥ १६० ॥

உனக்குப் புகழுண்டாகும். (சாதகம்—என்பது ஒருவகைப் பறவை. அது பூமியில் உள்ள தண்ணீரைக் குடிக்காது. மழை ஜலத்தைத் தன் வாயினால் ஏந்திக் குடித்து அதன் மூலமே விடாய் தீர்த்துக்கொள்ளும்). (௱௫௬)

உலகிலுள்ள தண்ணீரையெல்லாம் தன்னிடம் இழுத்துக்கொண்டு பெரும் அளவில் சேமித்து வைத்துக்கொண்டிருக்கும் பெருங்கடல், பாதாளத்தில் (பூமியின் கீழ்ப்புறத்தில்) சென்று (மறைந்து) விடுகின்றது. தன்னிடமுள்ள தண்ணீர் முழுவதையும் (உலகினருக்கே) கொடுக்கும் மேகமோவெனில், பெருமையுடன்) உலகத்தின் உச்சியில் (உயர்ந்த இடத்தில்) கர்ஜனை செய்கின்றது (௱௫௭)

ஜலத்திற்கு:—

ஜலமே! உன்னிடம் கவர்ச்சிகரமான நற்குணங்கள் இருப்பதுண்மையே. ஆனால் அவற்றுடன் ஒரு பெருங்குற்றமும் இருக்கின்றது. நீ எந்த நிறத்தோடு (வர்ணத்தோடு) கூடுகின்றாயோ, அந்த வர்ணமுள்ளவனாகவே அதே வினாடியில் மாறிவிடுகின்றாய். (உனக்காகச் சொந்தமான நிறமொன்றுமில்லை. இங்கு வர்ணம் என்னும் சொல் இனத்தையும் குறிக்கும்.) (௱௫௮)

ஜலமே! உனது குணங்களெல்லாம் ஒரு தோஷத்தினால் தோற்கடிக்கப் பட்டன. மிகவும் தூய்மையைப் பெற்றிருந்தும் நீ நீசமான வழியிலேயே (தாழ்ந்தவிடத்திலேயே) செல்லும் இயல்புடைத்தாயிருக்கின்றாய். (௱௫௯)

நீர், நன்மக்களைப்போன்றது. உயிர்வகைகளில்—(வாசியின்றிக்கே) யாவற்றினிடமும் கருணை காட்டுகின்றது. (உயிர்வாழ்வதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது.) மேலும் தனக்குச் சக்தியுள்ளவரை பிறருடைய தாபத்தைப்போக்குகின்றது. தான் உயிர்வாழும் வரை பிறருடைய தாபத்தைக்கண்டு வாளாவிருப்பதில்லை. (தாபம் = துயரம், விடாய்.) (௱௬௰)

अमृतं तव यन्नाम नीर ! तत्सर्वसंमतम् ।
यत स्त्वं सर्वजीवानां जीवातुर्जीवनौषधम् ॥ १६१ ॥

क्षीरस्य :—

क्षीर ! त्वयि गुणास्सर्वे शुचिता रुचिता तथा ।
स्वसमानं जलं यत्तु कुरुषे सैव दूष्यता ॥ १६२ ॥

पद्मिन्याः :—

प्रभाकरकरस्पर्शात् हर्षविद्योतितानना ।
दोषाकरकरस्पर्शं सहते पद्मिनी कथम् ? ॥ १६३ ॥

पद्मस्य :—

सूर्यालोका द्विकससि ह्यधः पंकं करोषि च ।
तस्मा त्पद्म ! सदा पद्मा त्वयि वासं करोति च ॥ १६४ ॥

நீரே! உனக்கு "அமிருதம்" என்னும் பெயரொன்றுள்ளதல்லவா? அதை யாவரும் ஒத்துக்கொள்கின்றனர். ஏனெனில், எல்லாப்பிராணிகளும் (சாகாமல்) உயிர்வாழ்வது உன்னாலேயே; எல்லோரையும் வாழவைக்கும் அருமருந்தாக இருக்கின்றாய் நீ. (நீர் இன்றி ஒருயிரும் வாழாது.) (௱௬௧)

பாலுக்கு :—

பாலே! உன்னிடம், தூய்மை-இன்சுவை இதுபோன்ற நற்குணங்கள் யாவும் நிறைந்துள்ளன. இஃதுண்மையே. ஆனால் நீ ஒரு பெருங்குற்றம் செய்து வருகின்றாய். (உன்னுடன் சேர்ந்த) ஜலத்தையும் உனக்குச்சமானமாகவே செய்து விடுகின்றாய். அஃதொன்றுதான் உன் தவறு. (௱௬௨)

தாமரை ஓடைக்கு :—

கதிரவனுடைய கரங்கள் (கைகள்-கிரணங்கள்) பட்டமாத்திரத்திலேயே உவகை உள்ளடங்காமல் முகமலர்ச்சியுற்று ஒளிவீசும் தாமரைத் தடாகம், தோஷாகரனுடைய (குற்றம் நிரம்பியவனுடைய, இரவில் திகழும் சந்திரனுடைய) கரம் (கை, கிரணம்) தீண்டுவதை எவ்வாறு சகிக்கும்? (௱௬௩)

தாமரை மலருக்கு :—

கதிரவனைக் கண்டமாத்திரத்தில் (அவனது கிரணங்களால்) மலர்ந்து ஒளியுடன் திகழ்கின்றாய். சேற்றை (அழுக்கை)க் கீழே வைத்து விடுகின்றாய். (சேற்றில் ஊன்றியுள்ளது, குற்றங்களைக் கழிக்கின்றது.) அதனால்தான், தாமரை மலரே! எப்போதும் ஸ்ரீமஹாலக்ஷ்மி உன்மீதே வாசம் செய்கின்றாள்.

तुलस्याः :—

नानाविधा बहुफलाः ओषध्यः सन्ति कानने ।
हरेः प्रियतमा यस्मा तुलसी पूज्यते जनैः ॥ १६५ ॥

बिल्वस्य :—

बिल्व ! त्वज्जन्म सफलं त्वत्पत्रै रर्च्यते शिवः ।
गात्रेण यज्ञे यूपस्त्वं तव मूलं महौषधम ॥ १६६ ॥

कदल्याः :—

रंभेति तव यन्नाम युक्तं तत्सर्वसंमतम् ।
यतः सभासु सर्वासु त्वामानयति वै जनः ॥ १६७ ॥

अन्येऽपि शाखिनस्सन्ति फलपुष्पोपयोगिनः ।
रंभा तु पर्णकुसुमफलैः सर्वोपकारिणी ॥ १६८ ॥

துளசிக்கு :—

பலவகைப்பட்டதும் அதிகமான பழங்களை (பயனை)த் தருபவையுமான ஒஷதிகள் (செடிகள்) காட்டில் எவ்வளவு இருக்கின்றன? ஆயினும் திருமாலுக்கு மிகவும் இஷ்டமானது என்னும் காரணத்தால் துளசியை ஜனங்கள் பூஜிக்கின்றனர். (௱௬௫)

பில்வமரத்திற்கு :—

பில்வமரமே! உனது பிறவியே பயனுடைத்து. உனது இலைகளால் சிவபெருமான் பூஜிக்கப்படுகின்றார். யாகங்களில் உனது உடலை (கிளையை)யே யூபஸ்தம்பமாக நிறுத்துகின்றனர். உனதுவேர் சிறந்த ஒஷதியாகின்றது. (௱௬௬)

வாழைக்கு :—

வாழையே! உனக்கு "ரம்பா" என்றொரு பெயருண்டே, அது சாலப் பொருந்தும். உலகமெல்லாம் இக்கருத்தை ஏற்கும். ஏனெனில்; சபைகளிலெல்லாம் (விழாக்களிலெல்லாம்) மக்கள் உன்னையே முக்கியமாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றனர்.

தேவேந்திரனுடைய அவைக்களத்தில் உள்ள அப்ஸரஸ்களுள் சிறந்த கட்டழகியான நாட்டியக்காரிக்கும் வாழைமரத்திற்கும் பொதுப்பெயர் "ரம்பை" என்பது. சிலேடை. (௱௬௭)

மற்ற மரங்களும் இருக்கின்றன. கனிகளையும் மலர்களையும் நமக்களித்து

पनसस्य :—

पनसं सुजनं मन्ये बहिर्दर्शितकण्टकम् ।
अन्तः पीयूषवत्स्वादु बहुपक्वफलान्वितम् ॥ १६९ ॥

आम्रस्य :—

सहकारे गुणाः केचि द्दोषोऽप्यस्ति महानयम् ।
अज्ञाना त्कोकिले काके यद्ददाति समं फलम् ॥ १७० ॥

फलितः सहकारश्चे त्पिकाद्याः फलभागिनः ।
सफलः पिचुमन्दश्चेत्! ध्वांक्षाणामेव तत्फलम् ॥ १७१ ॥

"रसाल" इति ते नाम युक्त माम्र! सतां मतम् ।
यतः पक्वफलै रुच्यैः प्रीणय स्यखिलान् जनान् ॥ १७२ ॥

உதவுகின்றன. ஆனால் அவை வாழைமரம் போலாகா. இது, தனது இலை, பூ, காய், பழம் ஆகிய எல்லாவற்றாலும் எல்லோருக்கும் உதவிசெய்கின்றதல்லவா?

பலாமரத்துக்கு :—

வெளியில் முட்களைத் தோற்றுவித்துக்கொண்டிருப்பதும், உள்ளே அமுதம் போல் இனியதும், பழுத்த கனிகள் பலவற்றுடன் கூடியதுமான பலாமரத்தை (ஸுஜனமாக) நல்லவனாக நினைக்கின்றேன். நன்மக்களும், பிறருடைய நன்மையையே கருதி, குற்றங்களைக்கடிந்து உள்ளன்புடன் இனியவர்களாகவே இருப்பர். (௱௬௯)

மாமரத்திற்கு :—

மாமரத்தில் குணங்கள் பல இருப்பதுண்மையே. ஆனால் ஒரு பெருங் குற்றமும் உள்ளது. குயில் காகம் இரண்டிற்கும் வாசியறியாமல் ஒரேவிதமாகப் பழங்களைத் தருகின்றது இது. (௱௭௰)

மாமரம் பழுத்தால், குயில் முதலியவற்றுக்குப் பழம் கிடைக்கும். வேப்ப மரம் பழுத்தால்! காகங்களுக்கே அக்கனிகள். (௱௭௧)

மாமரமே! உனக்கு "ரஸாலம்" என்று ஒரு பெயருள்ளதே, அது மிகவும் பொருத்தமானது. நல்லோர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவது. ஏனெனில், நன்றாகப் பழுத்தவையும் சுவைமிகுந்தவையுமான உனது இனிய கனிகளால் யாவரையும் நீ இன்பமுறச் செய்கின்றாய். (ரஸாலம்—ரஸம் மிக்கது.) (௱௭௨)

पूगस्य :—

जातस्त्वं सरला त्समुन्नतिमतः सद्वृत्ततः शाखिनः
त्वां पुण्याहमहोत्सवे द्विजवरा अर्चन्ति दैवात्मना ।
सभ्यास्सर्वसभासु सादरमहो त्वामानयन्त्यन्वहं
भो पूगीफल! कुत्र वा कठिनता लब्धा त्वयैतादृशी? ॥ १७३ ॥

अश्वत्थस्य :—

त्वन्मूले चतुराननो निवसति त्वन्मध्यभागे हरिः
साक्षाच्छंकर एव सर्वजगतां नाथस्त्वदग्रे स्थितः ।
पूज्येनापि कथं त्वयाऽऽशरगणो दत्तावकाशः कृतः?
तत्संपर्कवशात्तु पिप्पल! सतामस्पृश्यतां यासि भोः! ॥ १७४ ॥

तालस्य :—

न वृथातु भवत्येव महतामुपसर्पणम् ।
बहुकालात्तालशाखी फलत्येव न संशयः ॥ १७५ ॥

பாக்கிற்கு :—

நேர்மையானதும், உயர்ந்ததும், வட்டவடிவமான (நல்லொழுக்கம் நிறைந்த) தாயுமுள்ள மரத்தினின்று நீ தோன்றுகின்றாய். புனிதமான நன்னாட்களிலும், விழாக்களிலும், அந்தணர்கள் யாவரும் தெய்வமாகவே உன்னைப் பூஜிக்கின்றனர். சபைகள் யாவற்றிலும், அவற்றை நடத்துபவர்கள் தினந்தோறும் பரிவுடன் உன்னையே கொண்டுவந்து வைக்கின்றனர். பாக்குக்கனியே! இவ்வளவு கடினமாயிருப்பதற்கு நீ எங்குதான் கற்றுக்கொண்டாயோ! (௱௭௩)

அரசமரத்திற்கு :—

உன் அடிப்பாகத்தில் நான்முகன் நித்தியவாஸம் பண்ணுகின்றான். உனது மத்திய பாகத்தில் திருமால் வாஸம் செய்கின்றார். உனது நுனிப்பகுதியிலோவெனில், எல்லா உலகங்களுக்கும் உடையவனாகிய ஸாக்ஷாத் சங்கரனே வீற்றிருக்கின்றார். இக்காரணங்களால் நீ எல்லோராலும் பூசிக்கத்தக்கதாகின்றாய். இப்படிப்பட்ட உன்னால் அரக்கர் கூட்டங்களுக்கு இடமளிக்கப்பட்டதெங்ஙனம்? அவ்வாறான அரக்கர்களின் சேர்க்கையினாலேயே, அரசமரமே! நீ நல்லோர்களுக்குத் தீண்டத்தகாததாகிவிட்டாய்! (௱௭௪)

பனைமரத்திற்கு :—

பெரியோர்களைப் பணிவுடன் உபசரித்தல் ஒருகாலும் வீணாகாது.

चिञ्चायाः :—

आरामेषु विवर्धिताः प्रतिदिनं ये चाम्रवृक्षादयः
तेषां पक्वफलं चिरस्थितमहो ! दुर्गंधमापद्यते ।
चिञ्चा यत्नविवर्धिता फलभरं सूते रसालं चिरं
रुच्यं कल्पलतेव सर्वजनताप्रार्थ्यं प्रियं सर्वदा ॥ १७६ ॥

चम्पकस्य :—

वर्णः स्वर्णसमः समस्तजनतानन्दप्रदं दर्शनं
सौरभ्यन्तु तवैव, सर्वसुमनोवृन्दे त्वमेवाग्रणीः ।
आमोदं परमं व्रजन्ति विबुधास्त्वत्पूजिताः सादरं
सामीप्यं तव चेन्न यान्ति मधुपाः का चंपकास्ति क्षतिः ? ॥ १७७ ॥

வெகுகாலம் கழித்தாவது பனைமரம் பழம் கொடுத்தேதீருகின்றது. சந்தேகமில்லை. (௱௭௫)

புளியமரத்திற்கு :—

அழகிய தோட்டங்களில் தினந்தோறும் தவறாமல் நீர் ஊற்றிப் பல்வகையான உபசாரங்களுடன் மா-பலா முதலிய எவ்வளவோ மரங்கள் வளர்க்கப்படுகின்றன. அவைகள் தருகின்ற பழுத்த பழங்கள் யாவும் உடனுக்குடன் உபயோகிக்கவேண்டியவை. வெகுகாலம் அவற்றை வைத்திருந்தால், அழுகிப்போகும் துர்நாற்றம் தாங்கமுடியாது. ஆனால், புளியமரம் அவ்வாறல்ல. அது கற்பகக்கொடிபோன்றது. கொஞ்சம் சிரமப்பட்டு அதை வளர்த்துவிடவேண்டும். அவ்வளவுதான். மரம் கொள்ளாமல் குலுங்கக்குலுங்கக் காய்க்கும். காய்கள் முற்றிக் கனிகளாகும். அவை ரஸம் (புளிப்பு) நிறைந்திருக்கும். வெகுநாள் வரை அவற்றின் சுவை கெடாமல் நீடித்திருக்கும். எல்லோரும் அவற்றை நாடிச்செல்வர். யாவர்க்கும் எக்காலமும் பிரியமானவையாக அவை இருக்கும். (௱௭௬)

செண்பகத்திற்கு :—

செண்பகமே! உனது நிறம் பொன்னையொத்தது. உனது தோற்றமும் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத்தருவது. உனது மணமோவெனில், ஈடு இணையற்றது. அது உனக்கே இன்றியமையாதது. நறுமணங்கமழும் மலர்கள் கூட்டத்தில் நீயே முதன்மை தாங்குகின்றாய். உன்னால் தேவர்களைப் பரிவுடன் பூசித்தால் அவர்கள் பேரானந்தமெய்துகின்றனர். மலர்களிலுள்ள மதுவையே நாடிச்செல்லும் வண்டினங்கள் (குடியர்கள்) உன்னையணுகாவிட்டால் அதனால் உனக்கென்ன குறை? (௱௭௭)

धुत्तूरस्य :—

आमोदेन सुवर्णेन स्वर्णाख्यां प्राप चम्पकः ।
धुत्तूर! धूर्त! निर्गंध! [1]स्वर्णाख्या ते विडम्बना ॥ १७८ ॥

जंबीरस्य :—

वर्तुलत्वं च जंबीर! वृथा ते स्वर्णवर्णता ।
यतस्त्वं घनसारं हि द्विजराजं विगर्हसे ॥ १७९ ॥

हंसस्य :—

हंसा दूरतरं वसन्ति कुहचिद्देशे मृणालाशनाः
चातुर्यं सुगतत्र मत्र सुजना घुष्यन्ति तेषां सदा ।
काकाः पुष्टतमा श्चरन्ति बलिभिः प्रत्यङ्गणं राविणः
तेषां दुर्गणशालिनां गुणकथा का वा? जनैः कथ्यताम् ॥ १८० ॥

ஊமத்தைக்கு :—

தனது நறுமணத்தாலும் கவர்ச்சிகரமான நிறத்தாலும் செண்பகமானது பொன்னின் பெயரை அடைந்தது. ஊமத்தையே! கொடிய தன்மை நிரம்பப் பெற்ற உன்னிடம் மணம் சிறிதுமில்லை. அவ்வாறிருந்தும் உனக்குப் பொன்னின் பெயர் வைக்கப்பட்டிருப்பது நகைப்பிற்கிடமேயாகும். (௱௭௮)

எலுமிச்சம்பழத்திற்கு :—

எலுமிச்சம்பழமே! நீ வட்டவடிவமாயும் பொன்னிறமாகவுமிருப்பினும் பயனில்லை. ஏனெனில், கனஸாரமான (இப்பெயருள்ள—கனமான ஸாரமுள்ள) த்விஜராஜனை (கற்பூரத்தை, அந்தணர்களுள் சிறந்தவனை) நீ நிந்திக்கின்றாய்.

அன்னப் பறவைக்கு :—

அன்னப் பறவைகள் வெகுதூரத்தில் ஏதோ ஒரு தேசத்தில் தாமரைக் கிழங்கை உணவாகக்கொண்டு வாசம் செய்கின்றன. திறமைசாலிகளென்றும் நல்ல பிராணிகளென்றும் அவற்றை நல்லோர் எக்காலமும் புகழ்கின்றனர். காகங்களோவெனில், பலியாக இடப்படும் சோற்றைத் தின்றுகொண்டு நன்றாகக் கொழுத்துத்திரிகின்றன. வீடுகள்தோறும் உட்புகுந்து தாழ்வாரங்களில் உட்கார்ந்துகொண்டு கொடூரமாய்க் கரைகின்றன. கூட்டங்கூட்டமாக வந்து பல தீமைகள் புரிகின்றன. இவற்றினிடம் நற்குணங்களைப்பற்றின வார்த்தைக்கே இடமில்லை. ஜனங்களே இதைக்கூர்ந்து கவனிக்கட்டும். (௱௮௰)

---

1. ஸம்ஸ்க்ருதத்தில் பொன்னுக்கும் ஊமத்தைக்கும் செண்பகத்திற்கும் ஒரே பெயர்

गरुडस्य :—

विनतानन्दजननः पक्षद्वयबलान्वितः ।
जिह्मगानां प्रहर्ता च तस्मात्तार्क्ष्यः पतत्रिराट् ॥ १८१ ॥

मानुषं दुर्लभं जन्म सदा संकीर्त्यतां हरिः ।
कृष्णेति प्रवदन् तार्क्ष्यो दर्शनीयः सतां सदा ॥ १८२ ॥

कीराः कोकिलपुंगवाः कति सुखां वाणीं भणन्त्यन्वहं
तान् के वा परिपूजयन्ति सुजनास्तद्दर्शने सादराः ।
कृष्णेति प्रवदन् पतत्र्यधिपतिर्दृश्यः सतां सर्वदा
को वा देववरस्य नाम निगदन् नाप्नोति सिद्धिं पराम् ? ॥ १८३ ॥

शुकस्य :—

नारिकेलफलं दृष्ट्वा हित्वा शालिवनं शुकः ।

கருடனுக்கு :—

[1]விநதைக்கு ஆனந்தத்தைத்தருபவர். (பணிந்தவர்களுக்கு ஆனந்தத்தைத் தருபவர்) பலமுள்ள இரண்டு சிறகுகளுள்ளவர். (இரண்டு பக்கங்களிலும் பலமுள்ளவர்) பாம்புகளைக் கொல்பவர். (கோணலாகச் செல்பவர்களைத் தண்டிப்பவர்) அதனால் கருடன் பறவைகளுக்கரசனாகின்றார். சிலேடை. (௱அக)

மானிடப்பிறவி பெறற்கரிது. எக்காலமும் திருமாலின் திருநாமத்தைச் சொல்லுங்கள். "கிருஷ்ணா!" என்றே சொல்லிக்கொண்டிருக்கும் கருடன், எப்பொழுதும் நல்லோர்களுக்கு விரும்பிக்காணக்கூடியதாயிருக்கிறது. (௱அஉ)

எத்தனை கிளிகள்! எத்தனை குயில்கள்! தினந்தோறும் இனிய குரலையெழுப்பிக் கேட்போர் மனத்தைப் பரவசமடையச்செய்கின்றன? அவற்றை ஆதரவுடன் நல்லோர்களில் எவராவது பூஜிக்கின்றனரா? அல்லது அவற்றைத் தேடிக்காண்பதில் ஊக்கம் காட்டுகின்றனரா? (இல்லை). எப்போதும் "கிருஷ்ணா!" "கிருஷ்ணா!" என்றே சொல்லிக்கொண்டிருக்கும் பறவையரசன் நல்லோர்களால் எக்காலத்திலும் பூஜிக்கப்படுகின்றான். தேவர்களுள் சிறந்தவராகிய திருமாலின் திருநாமத்தைச் சொல்லுகின்ற யார்தான் உயர்ந்த சித்தியைப் பெறமாட்டார்? (௱அ௩)

கிளிக்கு :—

நெல் வயலில் இருந்த கிளியானது தென்னை மரத்தின் உச்சியில் பெரிய

---

1. விநதை—கருடனுடைய தாய்.

प्रयातो न फलं प्राप्तः चञ्चुर्याता तु चूर्णताम् ॥ १८४ ॥

कोकिलस्य :—

परपुष्टे कृष्णपक्षे कोकिले सन्ति के गुणाः ?
एका वाङ्मधुरा नो चेत् निन्द्यः काकाद्भवेद्ध्रुवम् ॥ १८५ ॥

चातकस्य :—

बहवः पक्षिणः सन्ति भूमिष्ठजलपायिनः ।
चातकं मानिनं मन्ये घनादाप्नोति जीवनम् ॥ १८६ ॥

काकस्य :—

काक ! त्वय्यगुणाः सर्वे गुणोऽप्येको महानयम् ।
स्वरेण केनचिच्छीघ्रं शंससि त्वं प्रियागमम् ॥ १८७ ॥

தேங்காயைப் பார்த்து இதைவிட்டுப் பறந்தோடி அங்கே சென்றது. ஆனால் பயனொன்றுமில்லை. அம்மட்டோ? அலகு (அதைக்கொத்தியதனால்) பொடியாகிவிட்டது. (௱அ௪)

குயிலுக்கு :—

பிறரால் (காகத்தால்) வளர்க்கப்படுவதும், கறுத்த சிறகுகளுள்ளதுமான (குற்றம் நிறைந்த கட்சியுடையதுமான) குயிலினிடம் என்ன குணங்கள் உள்ளன? இனிமையான குரல் ஒன்றுமட்டும் அதனிடம் இல்லாவிடில், காகத்திலும் கீழ்ப்பட்டதாக குயிலும் இகழப்படும். இது திண்ணம். (௱அ௫)

சாதகத்திற்கு :—

பூமியிலுள்ள நீரைக்குடிக்கின்ற பறவைகள் எத்தனையோ இருக்கின்றன. சாதகப்பக்ஷி ஒன்றுதான் மானமுள்ளதென்பது என் கருத்து. அது தன் ஜீவனத்தை (நீரை) மேகத்தினிடமிருந்தே பெறுகின்றது. (௱அ௬)

காகத்திற்கு :—

காகமே! உன்னிடம் கெட்ட குணங்களெல்லாம் நிறைந்திருக்கின்றன. ஆயினும் பெரியதோர் நற்குணமும் இருக்கின்றது. ஒருவகைக் குரலினால், மனத்துக்கினிய விருந்தினரின் வருகையை நீ உணர்த்திவிடுகின்றாய். (௱அ௭)

रेरे काक! वराक! निंबतरुषु स्थित्वा तदीयं फलं
भुक्त्वा घोरतरं रटन् बहुतरं तत्रैव तोषं व्रज।
क्वैतच्चूतवनं फलैरभिनवं? कामी पिकाः सुन्दराः?
क्वैषां पञ्चमकूजितं? करट! ते मास्त्वत्र दुर्वाक्यता॥ १८८॥

सर्पस्य :—

भुजङ्गानां कुले शेषो विशेषात्कीर्तिमाप्तवान्।
सर्वाधारा धरा येन धार्यते शिरसा सदा॥ १८९॥

मण्डूकानत्सि यत्सर्प! युक्तं तत्कुक्षिपूर्तये।
नृणां दंशे फलं नान्यत् स्वपुच्छच्छेदनादृते॥ १९०॥

भेकस्य :—

एकत्र वासः पद्मिन्यां भेकस्य भ्रमरस्य च।
परागभाजनं भृङ्गः भेकः पङ्कस्य भाजनम्॥ १९१॥

ஏ காகமே! நீ ஒரு அற்பப்பிராணி. வேப்ப மரங்களிலேயே வசித்துக் கொண்டு அதன் கனிகளையே புசித்துக்கொண்டு கொடூரமாக ஓயாமல் சப்தித்துக் கொண்டிருக்கும் இயல்புடைய நீ அங்கேயே மகிழ்ச்சியுடன் அமர்ந்திருப்பாயாக புதிய பழங்கள் நிறைந்த அழகிய இந்த மாமரக்காடு எங்கே? அழகிய அந்தக் குயில் கூட்டங்கள்தான் எங்கே? அதற்கும் மேல் அவற்றின் செவிக்கினிய பஞ்சம ஸ்வரம் எங்கே? ஏ கரடமே! (காகமே!) உனது கடுமையான குரல் இங்கு வேண்டாம். (௱௮௮)

அரவத்திற்கு :—

பாம்புகளின் குலத்தில் ஆதிசேஷன் சிறந்த புகழடைந்தவர். எல்லா வற்றிற்கும் ஆதாரமான இந்தப்பூமி அவரால் எப்பொழுதும் தலையால் தாங்கப் படுகின்றதல்லவா? (௱௮௯)

பாம்பே! வயிறு நிறைவதற்காகத் தவளைகளைத் தின்கின்றாயே, அது தகும். மனிதர்களைக் கடிக்கின்றாயே. அதனால் உன் வால் அறுபட்டுப் போவதைத்தவிர வேறு பயனொன்றுமில்லை. (௱௯௰)

தவளைக்கு :—

ஓரே தாமரை ஓடையில்தான் தவளைகளும் வண்டினங்களும் வசிக்கின்றன. வண்டினம் மகரந்தப்பொடியையும், தவளைகள் சேற்றையும் அடைகின்றன.

मक्षिकायाः :—

हे मक्षिके! मधुरभक्षणलिप्सया त्व-
मावारितापि पुनरेष्यसि यत्तदस्तु ।
भोक्तुः प्रविश्य जठरं बहुयत्नतोऽपि
मृत्वान्ननाशकरणे तव कोऽत्र लाभः? ॥ १९२ ॥

पिपीलिकायाः :—

पिपीलिके! कणान् हृत्वा तद्युक्तं यत्तु जीवसि ।
दंशं कृत्वा नृणामङ्गे म्रियसे तेन किं फलम्? ॥ १९३ ॥

सरटस्य :—

नीचस्य बुद्धिहीनस्य मतिर्दूरं न सर्पति ।
सरटस्य गतिस्तावद्यावद्वेलावलोकनम् ॥ १९४ ॥

धेनोः :—

पीयूषं धरणीतले तव पयस्त्वद्दर्शनं शोभनम्

ஈக்கு :—

ஏ ஈயே! இனிய தின்பண்டங்களைத் தின்பதில் ஆவல்கொண்ட நீ பல தரமும் விரட்டப்பட்டாலும் மீண்டும் மீண்டும் அதன்மேலேயே வந்து உட்காருவாய். இது உனக்கு இயற்கையானது. அது கிடக்கட்டும். சோற்றின் மேல் உட்கார்ந்து, அத்துடன் உண்பவனுடைய வயிற்றினுள் பெருமுயற்சியுடன் நுழைந்து மடிந்துபோய் சோற்றையும் கெடுக்கின்றாயே, இதில் உனக்கென்ன லாபம்? (௱௯௨)

எறும்பிற்கு :—

எறும்பே! அரிசி முதலியவற்றின் சிறு பொடிகளை எடுத்துக்கொண்டு போய்ப் பிழைக்கின்றாயே, அது தகும். மனிதர்களின் உடம்பைக்கடித்து மடிகின்றாயே அதனால் என்ன பயன்! (௱௯௩)

ஓணானுக்கு :—

அறிவில்லாத அற்பனுடைய சிந்தனை வெகு தூரம் செல்லாது. ஓணானின் ஓட்டம் நீர் நிலையின் கரையைக் காணும் வரைதான். (௱௯௪)

त्वत्सेवा सकलार्थदा तव वपुस्स्पर्शोऽपि पुण्यप्रदः ।
त्वत्कण्डूयनमप्यघौघशमनं पूज्या त्वमेवासि गौः !
त्वद्वक्त्रं यदि पावनं तव गुणान्वक्तुं क्षमः कस्तदा ? ॥ १९५ ॥

सिंहस्य :—

सिंहं दृष्ट्वा पञ्जरस्थं सर्वे बिभ्यति वै जनाः ।
स्वच्छन्दचारिणं श्वानं दृष्ट्वा केऽपि न बिभ्यति ॥ १९६ ॥
जराजीर्णोऽपि शुष्कोऽपि क्षुधया पीडितोऽपि सन् ।
गजेन्द्रपललास्वादी सिंहो भक्षति किं तृणम् ? ॥ १९७ ॥

गजस्य :—

बन्धनस्थितमातङ्गः सहस्रभरणक्षमः ।
अपि स्वच्छन्दचारी श्वा स्वकुक्षिभरणेऽक्षमः ॥ १९८ ॥

பசுவிற்கு :—

பசுவே! இம்மண்ணுலகில் உனது பால் அமுதமாகின்றது. உன்னைக் காண்பதே மங்களகரமானது. உனக்குப்பணிவிடைகள் செய்தல் வேண்டியதெல்லாம் தரும். உனது உடம்பைத்தொடுவதே புண்ணியத்தைத்தரும். உனக்குத்தினவு தீருமாறு சொறிதல் பெரும்பாவங்களையும் தொலைக்கும். மேலும் இயற்கையாகவே நீ பூஜிக்கத்தகுதியுடையையாகின்றாய் உனது முகம் மட்டும் தூய்மையானதாக இருந்துவிட்டால், அப்பொழுது உனது குணங்களை யார்தான் அளவிட்டுச் சொல்லவல்லார்? (௱௯௫)

சிங்கத்திற்கு :—

கூண்டினுள் அடைபட்டுக்கிடக்கும் சிங்கத்தைக்கண்டு மக்கள் யாவரும் நடுங்குகின்றனர் தன்னிச்சைப்படித் திரிந்து கொண்டிருக்கும் நாயைக்கண்டு ஒருவரும் பயப்படுவதில்லை. (௱௯௬)

கிழத்தனத்தினால் தளர்ந்து போனாலும் உலர்ந்து போனாலும், பசியினால் வாடிப்போனாலும், மத யானையின் மாமிசத்தையே சுவைத்துண்ணும் சிங்கம் புல்லைத்தின்னுமா? (௱௯௭)

யானைக்கு :—

கட்டப்பட்டுக்கிடக்கும் நிலையிலேயே யானையானது ஆயிரம்பேரைப்பரிக்க (தாங்க, காப்பாற்ற) வல்லது. நாய் தன்னிச்சைப்படி திரிந்துகொண்டிருந்

मतङ्गजानां मान्यानां सदा दानोद्यतश्रियाम् ।
महाराजाङ्गणे वासः कान्तारे गहनेऽपि वा ॥ १९९ ॥

महतां दुःखमग्नानां महान्तः सुखदायिनः ।
गजानां पंकमग्नानामुद्धर्तारो मतंगजाः ॥ २०० ॥

शुन :—
शुनाञ्च पिशुनानाञ्च सदा सर्वत्रचारिणाम् ।
पात्रोच्छिष्टं विना प्राप्तिरन्या नैव प्रदृश्यते ॥ २०१ ॥

त्वं वा गच्छ यथेच्छतः प्रतिगृहं धावस्व वा तर्जितः
प्रत्यावृत्त्य यतस्व कुक्षिभरणे त्वं बुक्क वा कामतः ।
रेरे ! ग्रामनिवाससिंह ! करिराट्कुंभस्थलीं भिन्दता
नित्यं मानधनेन सिंहशिशुना साम्यं कथं स्यात्तव ? ॥ २०२ ॥

தாலுங்கூட தன் வயிற்றைப்பரிப்பதற்கே (காப்பாற்றுவதற்கே) சக்தியற்றது.

எப்பொழுதும் மதஜலம் பெருகிக்கொண்டேயிருக்கப்பெற்றவையும் (செல்வத்தை எக்காலமும் வாரி வழங்குவதிலேயே நாட்டங்கொண்டவையும்) கொண்டாடத்தகுந்தவையுமான யானைகளுக்கு இரண்டிடமே வசித்தற்கேற்றது ஒன்று பேரரசர்களின் அங்கணம் இரண்டு அடர்ந்தகாடு. (௱௯௯)

பெரியோர்கள் துக்கத்தில் மூழ்கினால், அவர்களைப்போன்ற மற்றப் பெரியோர்கள்தான் அதைத்தீர்த்து இன்பம்தர வல்லாராவார். சேற்றில் அழுந்திய யானைகளை வெளியில் தூக்குவதற்கு யானைகளேதான் உதவி செய்கின்றன. (௨௱)

நாய்க்கு :—

நாய்களும் கோட்சொல்பவர்களும் எங்கும் எப்பொழுதும் திரிந்து கொண்டேயிருக்கின்றனர். அதன் பயன் [1]பாத்திரோச்சிஷ்டம் ஒன்றுதான் வேறொன்றும் காணப்படவில்லை. (௨௱௧)

ஊரிலுள்ள வீடுகளிலெல்லாம் உன்னிஷ்டம்போல் அலைந்து திரிவாய். வீட்டுக்காரர்கள் அடித்துப் பயமுறுத்தினார்களாகில் அங்கிருந்து வெகுவேகமாய் ஓடிவிடுவாய். ஆனால் மீண்டும் உடனே அவ்விடத்திற்கே திரும்பிவந்து எவ்வகையிலாவது உன் வயிற்றை நிரப்பிக்கொள்வதற்கு முயற்சி செய்வாய்.

---

1. உண் கலத்தில் கழிக்கப்பட்ட எச்சில் உணவு. சற்பாத்திரங்கள் (நல்லோர்கள்) வாயினால் கூறியவார்த்தைகள்.

मार्जारस्य :--

किं कीरवत्तव वचो मधुरं? बिडाल!
किं व्याघ्रवद्बलपराक्रमिता तवास्ति? ।
किं फेरुवन्मतिबलं समयोचितं ते?
निर्लज्जतैव तव वृत्तिकरी सदैव ॥ २०३ ॥

इन्द्रवारुण्याः :--

अन्तरत्यन्तकटुका बहिःश्लक्ष्णा मनोहरा ।
दुष्टस्य धिषणेवेयं दृश्यते हीन्द्रवारुणी ॥ २०४ ॥

शंखस्य :--

जन्म क्षारजलाशये जनयिता जन्तुर्जलावासिकां
प्राप्ता [1]क्षुल्लकतां दधासि [2]जलज! त्वं निन्द्य एवास्यतः ।

அல்லது உன்னிஷ்டம்போல் "வள்" "வள்" என்று குரைத்துக்கொண்டேயிருப்பாய். கிராமத்தில் வசிக்கும் சிங்கமே! (நாயே!) தினமும் காட்டில் திரிகின்ற பெரிய யானையைத் தேடிப்பிடித்து அதன் மத்தகத்தைப் பிளந்து தன் பசியைத் தீர்த்துக்கொள்ளும் இயல்புள்ளதும் மானத்தையே செல்வமாகக் கருதிக்காத்துவருவதுமான சிங்கக்குட்டிக்கும் உனக்கும் ஒப்புமை எவ்வாறு உண்டாகும்? அது அதுதான். நீ நீதான். (உ௱உ)

பூனைக்கு :—

பூனையே! கிளிபோல் இனிய குரல் உனக்குண்டோ? புலிபோல் பலபராக்கிரமங்கள்தான் பெற்றிருக்கிறாயோ? அல்லது குள்ளநரிபோல் சமயோசிதமான புத்திபலம் உனக்கு உண்டா? இவையொன்றும் இல்லாவிடினும் உனக்கும் ஜீவனம் நடந்துவருகின்றதே, அது எதனால் தெரியுமா? உனது வெட்கங்கெட்ட தன்மையினால்தான். (உ௱௩)

இந்திரவாருணிக்கு :— (இது ஒரு வகைக் கொடி)

உள்ளே மிகவும் கசப்பானது. வெளித்தோற்றம் அழகாகவும் கவர்ச்சிகரமாகவுமிருக்கும் இவ்வாறு துஷ்டனுடைய புத்திபோலவே இந்திரவாருணியும் காணப்படுகின்றது. (உ௱௪)

சங்குக்கு :—

சங்கே! உப்புத் தண்ணீர் நிறைந்த கடலில் நீ தோன்றுகிறாய்.

1. க்ஷுல்லகம்—அற்பமான சங்கு—துஷ்டன். 2. ஜலம்—தண்ணீர்—அறிவிலி. சிலேடை.

त्वज्जन्मान्तरसञ्चितं सुचरितं किं वा यतस्त्वां हरि-
हस्तालंबनमाततान सततं पूज्योऽसि सद्भिस्ततः ॥ २०५ ॥

दीपस्य :--

सत्पात्रं मलिनीकरोति सुगुणान् भस्मीकरोति क्षणात्
स्नेहं नाशयति स्वभावचपलो दीपः स निन्द्यः सताम् ।
किन्तु ध्वान्तनिवारणैकपटु यत्तेजोऽस्ति तस्यैव तत्
तस्मात्सर्वजना नमन्ति, सदने तं स्थापयन्त्यन्वहम् ॥ २०६ ॥

इत्यन्योक्तिपद्धतिः ॥

அற்பமான சங்குப் பூச்சியே உன்னை உண்டுபண்ணுகின்றது. தண்ணீரிலேயே—அறிவிலிகளுடனே, நீ நித்தமும் வஸிக்கின்றாய். மிகவும் அற்பமான தன்மையே உன்னிடம் உள்ளது. துஷ்டத்தனம் நிறைந்ததாயிருக்கிறாய். தண்ணீரில் தோன்றிய (மூடர்களிடம் தோன்றிய) சங்கே! இக்காரணங்களால் நீ இகழக் கூடியதாகவே இருக்கின்றனை. உன்னிடம் சன்மாந்தரங்களில் (முற்பிறவிகளில்) சேமித்து வைக்கப்பட்ட புண்ணியம் ஏதோ பிரமாதமாய் உளது. அதனாலன்றோ ஸ்ரீமந்நாராயணன் உன்னை எக்காலமும் கையிலேயே ஏந்திக்கொண்டிருக்கின்றார்! அதனால்தான் நல்லோர்கள் உன்னைப் பூசிக்கின்றனர். (௨௦௫)

விளக்குக்கு :—

[1]நல்ல பாத்திரத்தை அழுக்குள்ளதாகச் செய்கின்றது. [2]நல்ல குணங்களை அழித்து நீறாகச்செய்து நாசம் செய்கின்றது. [3]சினேகத்தை அழித்துவிடுகின்றது. இயற்கையிலேயே [4]சபலமானது. இவ்வாறான விளக்கு நல்லோர்களுக்கு இகழக்கூடியதேயாகும். ஆயினும், இருளை வெருட்டும் சக்திவாய்ந்த ஒளியிருக்கின்றதே, அது இந்த விளக்குக்கேயுரியது. அதனால்தான் மக்கள் யாவரும் அதை வணங்குகின்றனர். மேலும் தினந்தோறும் தங்கள் வீடுகளில் பக்திசிரத்தையுடன் ஏற்றிவைக்கின்றனர். (௨௦௬)

அன்யோக்திபத்ததி முற்றும்.

---

1. சற்பாத்திரம்—நல்ல அறிவும் நற்குணங்களும் நிறைந்தவரும் தானம்கொடுப்பதற்கேற்றவரும்—நல்ல உலோகத்தால் செய்யப்பட்ட தகளிபோன்ற பாத்திரம்.

2. நல்ல குணங்கள்—நல்ல பண்புகள், நல்ல திரிகள் (நூல் திரிகள்)

3. சினேகம், நட்பு, எண்ணெய்.

4. சபலம் நிலையான கொள்கையற்றது. அசைந்துகொண்டேயிருப்பது. (சிலேடை)

अथ कथापद्धतिः ॥

द्यूतं न सेव्यं विद्वद्भिः विनोदेनापि सर्वथा ।
युधिष्ठिरनलौ चोभौ द्यूताद्दुःखमवापतुः ॥ २०७ ॥

न प्रार्थयीत मनसा वचसापि परस्त्रियम् ।
रावणेन वधः प्राप्तः सीतां प्रार्थयता सतीम् ॥ २०८ ॥

न परस्वं हरेत्प्राज्ञः कदाचिदपि किञ्चन ।
धर्मराजस्वकं हृत्वा मृत्युमाप सुयोधनः ॥ २०९ ॥

श्रोतव्यं सुहृदां वाक्यं हठं मानं परित्यजेत् ।
अश्रुत्वा महतां वाक्यं वधमाप सुयोधनः ॥ २१० ॥

श्रोतव्यं मातृवाक्यन्तु न श्रुतं चेद्भयं भवेत् ।
सर्पा दग्धाः सर्पसत्रे ह्यश्रुत्वा जननीवचः ॥ २११ ॥

கதாபத்ததி

அறிவாளிகள், எப்போதும் விளையாட்டுக்காகக் கூட சூதாட்டத்தில் ஈடுபடக்கூடாது. தர்மபுத்திரரும் நளமகாராஜனும் சூதாட்டத்தினால்தான் கஷ்டப்பட்டனர். (௨௱௭)

பிறருடைய பெண்டிர்களை மனத்தாலும் நினைக்கக்கூடாது. வாயாலும் வேண்டக்கூடாது. பதிவிரதையான சீதாதேவியை விரும்பிய இராவணன், தன் உயிரையே இழக்குமாறு நேரிட்டது. (௨௱௮)

அறிவாளியானவன் எப்போதும் ஒரு சிறிதும் பிறருடைய சொத்துக்களை அபகரிக்கக்கூடாது. துரியோதனன் தர்மபுத்திரருடைய சொத்துக்களைப் பறித்துக்கொண்டதன் காரணமாக மாண்டுபோனான், (௨௱௯)

நண்பர்களின் நல் வார்த்தைகளைக் கேட்கவேண்டும். பிடிவாதத்தையும் "நான்" என்னும் அகங்காரத்தையும் விடவேண்டும். பெரியோர்களின் வார்த்தையைக் கேட்காமையினால் துரியோதனன் கொல்லப்பட்டான். (௨௱௰)

தாயின் சொற்படி நடக்கவேண்டும். இல்லையேல் பெருந்தீங்கு வரும். பாம்புகள், தாயின் சொல்லை அவமதித்ததனால் ஸர்ப்பயாகத்தில் தீயில் வீழ்ந்து மாண்டுபோயின. (௨௧௧)

कस्यापि गौर्न हर्तव्या हृता चेत्कष्टमाप्नुयात् ।
वसिष्ठधेनुं हृत्वा तु वसवो जनिमाप्नुवन् ॥ २१२ ॥

निर्बंधो नैव कर्तव्यः कदाचिदपि कस्यचित् ।
निर्बंधात्कौशिकस्याशु गालवः कष्टमाप्तवान् ॥ २१३ ॥

नैव गर्वस्तु कर्तव्यः सदाहं बलवानिति ।
विष्णुहस्ताद्वैनतेयः प्राप कष्टां दशां क्षणात् ॥ २१४ ॥

अन्यवस्त्रं न धर्तव्यं धृतश्चेत् कलहो भवेत् ।
शर्मिष्ठावसनं धृत्वा देवयान्याप संकटम् ॥ २१५ ॥

सर्वदाहं विजेष्यामीत्येवं गर्वं परित्यजेत् ।
पश्य! भार्गवरामोऽपि भीष्मादाप पराजयम् ॥ २१६ ॥

विचार्यैव तु कर्तव्यमातिथ्यं बुद्धिमत्तरैः ।
आतिथ्यात्कौशिकस्याथ वसिष्ठः प्राप दुःखिताम् ॥ २१७ ॥

யாருடைய பசுவையும் அபகரிக்கக்கூடாது. அபகரித்தால் துன்பமே வரும். "வஸுக்கள்" எனப்படும் எட்டு தேவர்கள் வஸிஷ்டமுனிவரின் "நந்தினீ" என்னும் பசுவைப் பறித்துச்சென்று அதன் பயனாக மானிடப் பிறவியை அடைந்தனர். (உகஉ)

எப்பொழுதும் யாரையும் நிர்பந்தித்தல் கூடாது. காலவர் என்னும் முனிவர் விசுவாமித்திர முனிவரை நிர்பந்தம் செய்ததனால் பிறகு மிகுந்த கஷ்டமடைந்தார்.

"நானே மிக்க பலமுள்ளவன்" என்று செருக்குக்கொள்ளுதல் எப்போதும் தகாது. அவ்வாறு செருக்குற்ற கருடன் விஷ்ணுவின் கையினால் ஒரு நொடியில் கஷ்டத்தையடைந்தார். (உகச)

பிறருடைய ஆடையை ஒரு போதும் அணியக்கூடாது. அவ்வாறு உடுத்துவதனால் கலகம் வருவது திண்ணம். சர்மிஷ்டையின் ஆடையை உடுத்துக் கொண்டதனால் தேவயானீ என்பவள் பெரும் சங்கடத்தையடைந்தாள். (உகரு)

"எப்போதும் நானே வெற்றி பெறுவேன்" என்னும் இறுமாப்பு கூடாது. அதை விடவேண்டும் பார்! பிரசித்திபெற்ற வீரராகிய பரசுராமனும் கூட தனது சீடராகிய பீஷ்மரிடம் தோல்வியடைந்தார். (உகசா)

விருந்தினராக ஒருவரை ஏற்று உபசரிப்பதில் சிறிது முன்யோசனை அவசியம். அறிவாளிகள் இவ்வாறே நடந்துகொள்வர். ஆழ்ந்து சிந்தனை

अहितं नैव चिन्त्यन्तु केनापि ह्युपकारिणाम् ।
श्वा तु प्राप्तः शरभतां पुनः प्राप्तः स्विकां तनुम् ॥ २१८ ॥

अवमानो न कर्तव्यो ब्राह्मणस्य कदाचन ।
अवमानादगस्त्यस्य नहुषः प्राप सर्पताम् ॥ २१९ ॥

आत्मस्तोत्रं न कर्तव्यं कृतं चेल्लघुतामियात् ।
आत्मप्रशंसां कृत्वा तु ययातिः स्वर्गतश्च्युतः ॥ २२० ॥

सतामनुस्मृतिः कार्या वस्तव्यं तैस्सदा नृभिः ।
स्वर्गाच्च्युतो ययातिस्तु दौहित्रैस्तारितः पुनः ॥ २२१ ॥

जनकादधिकः पुत्रो जायते गुणकर्मतः ।
कुंभोद्भवो मुनिः सर्वं सागरं पीतवान् क्षणात् ॥ २२२ ॥

செய்யாமல் விசுவாமித்திரரைத் தன் அதிதியாக ஏற்றுக்கொண்ட வஸிஷ்ட முனிவர் பெரிதும் துக்கமடைந்தார். (௨௧௭)

உபகாரம் செய்தவருக்குத் தீங்கு நினைப்பது யாருக்கும் துன்பத்தையே தரும். ஒரு முனிவரின் அருளால் ஒரு நாய் " சரபம் " என்னும் மிக்க பலமுள்ள மிருகமாக மாறிற்று. அது அம்முனிவரையே கொல்லப்பார்த்தது. உடனே பழையபடி நாயாகவே அதைச் செய்துவிட்டார் அவர். (௨௧௮)

அந்தணர்களுக்கு ஒருபோதும் அவமானம் பண்ணிவைக்கக்கூடாது. நஹுஷன் என்னும் அரசன் தேவேந்திரப் பட்டத்தையடைந்துவிட்ட கர்வத்தினால் அகத்திய முனிவரை அவமதித்து அதன் பயனாகப் பாம்பு இனத்தில் பிறந்தான். (௨௧௯)

தன்னைத்தானே புகழ்ந்துகொள்வது தகாது. தற்புகழ்ச்சியினால் ஒருவன் இலகுவாகிவிடுவான் (ஸாரமில்லாதவனாகிவிடுவான்). சுவர்கத்திற்குச்சென்ற யயாதி என்னும் அரசன், தற்புகழ்ச்சி செய்துகொண்டதனால் வீழ்ச்சியுற்றான்.

நல்லோர்களை எக்காலமும் நினைக்கவேண்டும். எப்பொழுதும் அவர்களுடனே வசித்தலும் வேண்டும். சுவர்கத்திலிருந்து வீழ்ந்த யயாதி, புண்ணியவான்களான தனது பெண்வயிற்றுப் பேரன்களால் துயரத்தைக் கடந்தான். (௨௨௧)

சில சந்தர்ப்பங்களில் தகப்பனைக்காட்டிலும் குணங்களினாலும் செயல்களினாலும் தனயனே சிறந்தவனாகிவிடுகின்றான். அகத்திய முனிவர் குடத்தில் பிறந் . கடல் முழுவதையும் குடித்துவிட்டார் ஒரே நொடியில். குடத்தால் இதைச் செய்யமுடியுமா? (௨௨௨)

सीमन्तिनीषु काचित्तु जायते कुलनन्दिनी ।
सावित्र्या तारितं साध्व्या पितृभर्तृकुलद्वयम् ॥ २२३ ॥

कुले कश्चित्पुमान् श्लाघ्यो जायते कुलनन्दनः ।
भगीरथेन यत्नात्तु तारिताः सगरात्मजाः ॥ २२४ ॥

प्रबलन्तु रिपुं हत्वा ख्यातिं याति महान् सदा ।
इन्द्रो वृत्रासुरं हत्वा संप्राप्तस्तु महेन्द्रताम् ॥ २२५ ॥

अथ दशावताराः ॥

मत्स्यस्य —

दुष्टेन यद्धृतं वस्तु बलाद्ग्राह्यं सता ततः ।
शंखासुरहृता वेदाः मत्स्येन पुनराहृताः ॥ २२६ ॥

कूर्मस्य —

महाभारो हि महता धार्यते लीलया सदा ।

பெண் மக்களிலும் சிலர் குலத்தைச் சிறப்புறச்செய்கின்றனர். பதிவிரதா சிரோமணியான ஸாவித்திரியினால், தான் பிறந்த குலமும் தனது கணவனுடைய குலமும் உயர்த்தப்பட்டது. (௨௨௩)

ஒவ்வொரு குடியில் தன் குலத்தையே மகிழ்விக்கும் ஆற்றல் பெற்ற மகன் தோன்றுகின்றான். பகீரதன் என்பவன் தனது முன்னோர்களான ஸகர புத்திரர்களைப் பெரும் முயற்சி செய்து நற்கதியடையச் செய்தான். (௨௨௪)

மகாபுருஷன் எப்பொழுதும் பலம் மிகுந்த பகைவனைக்கொன்று புகழ் பெறுகின்றான். இந்திரன் விருத்திராசுரனைக்கொன்றான். அதனால் மஹேந்திரன் ஆகிவிட்டான். (௨௨௫)

(திருமாலின்) பத்து அவதாரங்கள்.

மச்சாவதாரத்திற்கு:—

தீயவனால் ஒரு பொருள் பறிக்கப்பட்டால், நன்மக்கள் பலாத்காரமாக அதைத் திரும்பப்பெறல் வேண்டும். சங்காஸுரனால் பறிக்கப்பட்ட வேதங்கள் மச்சாவதாரங்கொண்ட திருமாலால் மீட்கப்பட்டன. (௨௨௬)

கூர்மாவதாரத்திற்கு:—

மஹான்கள் பெரும்பாரத்தையுங்கூட ஆயாஸமின்றிக்கே விளையாட்டாகத்

कूर्मेण मन्दरगिरिर्धृतः क्षीराब्धिमंथने ॥ २२७ ॥

वराहस्य —

निमग्नं सज्जनं यस्मात् उद्धर्तुं हि महान् क्षमः ।
क्षमा मग्ना जलनिधौ वराहेणोद्धृता बलात् ॥ ॥ २२८ ॥

नरसिंहस्य —

चराचरेषु सर्वेषु व्याप्य विष्णुस्तु तिष्ठति ।
प्रह्लादरक्षणार्थं हि स्तंभाज्जातो नृकेसरी ॥ २२९ ॥

वामनस्य —

पराक्रमः स्वतस्सिद्धो वयस्तत्र न कारणम् ।
बालेन विष्णुना क्रान्ता त्रिलोकी तु त्रिभिः पदैः ॥ २३० ॥

जामदग्न्यरामस्य —

अवमानं तु बलवान् तेजसा परिमार्जति ।

தாங்குவர். பாற்கடலைக் கடைந்தபோது ஆமைவடிவங்கொண்ட திருமால் மந்தரமலையைத் தாங்கினார். (உஉஎ)

வராகாவதாரத்திற்கு:—

நல்லவர்கள் மூழ்கிவிட்டால் அவர்களை (வெளியில்) மேலேகொண்டுவந்து சேர்ப்பதற்குப் பெரியோர்கள்தான் ஏற்றவர்கள். பூமியை ஒரு காலத்தில் கடலுக்குள் மூழ்கிவிட்டது. திருமால் வராகாவதாரம் செய்து, வலிமையினால் அதை மேலேகொண்டுவந்து சேர்த்தார். (உஉஅ)

நரஸிம்மமூர்த்திக்கு:—

அசைவனவும் அசையாதனவுமாகிய எல்லாப்பொருள்களிலும் ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் வியாபித்து நிற்கின்றார். அதனாலேதான் பிரஹ்லாதனைக் காப்பதற்காகக் கம்பத்தினின்று நரசிங்கமாகத் தோன்றினார். (உஉகூ)

வாமனருக்கு:—

பராக்கிரமம் (வீறு) இயல்பாகவே தோன்றும். அதற்கு வயது காரணமன்று. திருமால் சிறுவனாக இருக்கையிலேயே மூவுலகங்களையும் மூன்றடியால் அளந்துவிட்டார். (உங0)

पितृकोपाज्जामदग्न्यः पृथ्वीं निःक्षत्रियां व्यधात् ॥ २३१ ॥

दाशरथिरामस्य —

श्रोतव्यन्तु पितुर्वाक्यं श्रुतश्चेत्कीर्तिमाप्नुयात् ।
रामः पितृवचः श्रुत्वा प्राप सर्वोन्नतिं ततः ॥ २३२ ॥

बलरामस्य —

अतिभारो न भर्तव्यो भृतश्चेत्पतनं भवेत् ।
बलं हृत्वा प्रलंबस्तु तद्धारान्मृतिमाप्तवान् ॥ २३३ ॥

बुद्धस्य —

मर्त्येन महतां चित्तं ज्ञायते न कदाचन ।
बुद्धावतारग्रहणं किमर्थं विष्णुना कृतम् ? ॥ २३४ ॥

कल्केः —

पापाधर्मविरोद्धारो हन्तव्या बलिना बलात् ।

பரசுராமனுக்கு :—

பலமுள்ளவன் அவமானத்தைத் தனது வலிமையினால் துடைத்துவிடுவான். தன் தந்தையாரை ஒரு க்ஷத்திரியன் கொன்றான் என்னும் கோபத்தினால் பூமியில் க்ஷத்திரியப்பூண்டே இல்லாமல் அழித்துவிட்டார் பரசுராமன். (௨௩௧)

தசரதராமனுக்கு :—

தந்தையின் சொல்லைக்கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அவ்வாறு செய்வதனால் பெரும் புகழுண்டாம். தந்தை சொல்லைக்கேட்டு அதன்படி நடந்ததனால் ஸ்ரீராமன் எல்லோரையும்விட மேன்மையடைந்தார். (௨௩௨)

பலராமனுக்கு :—

பெருஞ்சுமையைச் சுமக்கக்கூடாது. அப்படிச் சுமந்தால் வீழ்ச்சியேவரும். ப்ரலம்பாஸுரன் பலராமனைத் தூக்கிச்சென்று அவராலேயே மரணமடைந்தான்.

புத்தருக்கு :—

பெரியோர்களின் பனதை மனிதனால் ஒருபோதும் அறியமுடியாது. விஷ்ணு எதற்காக புத்தராய் அவதரித்தார்? (௨௩௪)

கல்கிக்கு :—

தர்மத்தைப் பகைக்கும் பாவிகளை வலிமையுள்ளவன் வலுவில் கொல்ல

कल्किना निहता म्लेच्छाः धर्मः संस्थापितः पुनः ॥ २३५ ॥

आलस्यं नास्ति महतां धर्मकार्यार्थसाधने ।
दशावताराः कृष्णेन गृहीता धर्मसिद्धये ॥ २३६ ॥

धीरे सद्गुणसंपन्ने विबुधोत्तमसेविते ।
लक्ष्मीर्वासं प्रकुरुते सततं पुरुषोत्तमे ॥ २३७ ॥

नारोजीपण्डितेनेयं रचिता सूक्तिमालिका ।
पठितव्या सदा सद्भिस्सभ्यामोदप्रदायिनी ॥ २३८ ॥

इति श्रीमद्विश्वनाथपण्डितार्यसूनुनारोजीपण्डितविरचिता
सूक्तिमालिका
संपूर्णा

வேண்டும். கல்கியாக அவதரித்த விஷ்ணு மிலேச்சர்களைக் கொன்று மீண்டும் தர்மத்தை நிலைநிறுத்தினார். (௨௩௫)

பெரியோர்களுக்குத் தருமமான காரியங்களைச் சாதிப்பதில் சோம்பல் கிடையாது. தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவே ஸ்ரீமஹாவிஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்தார். (௨௩௬)

உறுதியானவனும், நற்குணங்கள் நிறைந்தவனும், தேவசிரேஷ்டர்களால் வணங்கப்பட்டவனுமாகிய புருஷோத்தம (விஷ்ணுவி)னிடம் திருமகள் நித்யவாஸம் செய்கின்றாள். (௨௩௭)

நாரோஜீபண்டிதரா(கிய என்ப)ல் இயற்றப்பட்ட இந்த ஸூக்திமாலிகை, ஸபைகளில் குழுமியுள்ள புலவர்களுக்குப் பேரானந்தம் தரவல்லது. (அதனால்) நல்லோர்கள் இதை எப்போதும் பாடம் பண்ணிவைத்துக்கொள்ளல் வேண்டும்.

விச்வநாத பண்டிதார்யரின் புதல்வராகிய நாரோஜீ பண்டிதரால்
இயற்றப்பட்ட ஸூக்திமாலிகை முற்றும்.

श्रीः

सूक्तिमालिकाश्लोकानामकाराद्यनुक्रमणी

श्लोकाः	पुटानि	श्लोकाः	पुटानि	श्लोकाः	पुटानि
अ		इक्षुकाण्डा	9	ख	
अंबुजनि	6	उ		खलास्सुम	21
अंधवद्वी	27	उपकारं	20	ख्यातिंयाति	19
अतिभारो	60	उपकारो	25	ग	
अतिस्नेहो	14	ए		गुणा एव	32
अत्यानुकू	32	एकत्र वा	49	गुणैस्तु पू	19
अनृतं नै	15	एका विद्या	32	गुरुवाक्यै	2
अन्तरत्य	53	एतावन्त	6	च	
अन्तःकठो	37	क		चन्दनं सु	18
अन्यवस्त्रं	56	कङ्कणव	2	चराचरे	59
अन्येऽपि शा	42	करधृत	4	ज	
अबद्धंपु	37	,,	7	जनकाद	57
अमृतन्त	41	कलङ्कयपि	39	जन्मक्षार	53
अर्थहानिः	25	कस्तूरीसृ	26	जन्मनो भू	12
अलकाःपि	,,	कस्यापिगौ	56	जन्ममा	5
अवमानो	57	काक! त्वय्य	48	जपः प्रय	10
अवमानं	59	कान्तिः शान्ति	28	जराजीर्णो	51
अशाश्वते	14	कामः सङ्को	37	जल! त्वयि	40
अशुद्धं शु	30	कालेन दुः	10	जलद! त्वं	39
अहङ्कारः	27	किं कीरव	53	जलस्य सं	40
अहितं नै	57	किंवा खद्यो	38	जातस्त्वं स	44
अहो! कन	27	किंवा सुखं	36	जिह्वालौल्यं	31
आ		कीराः कोकि	47	जिह्वावत्स	18
आत्मस्तोत्र	57	कुले कश्चि	58	ज्ञानं नशो	32
आमोदेन	46	कुचौ गोप	17	त	
आरामेषु	45	कृतविह	7	तव नीर!	40
आलस्यं ना	61	क्षीर! त्वयि	41	तवावता	37
इ		क्षीरोदधेः	33	तांबूलभ	30

श्लोकाः	पुटानि
त्वं वा गच्छ	52
त्वं साक्षात्	27
त्वज्जीवनं	39
त्वन्मूले च	44
द	
दत्तश्चेत्	16
दानात् ख्या	14
दानान्नास्ति	13
दारिद्र्यं	34
दिनस्य भू	12
दुःखं नति	10
दुर्गुणस्य	24
दुर्जनानां	25
दुर्जनस्सा	20
दुष्टेनय	58
देवानां त्वं	36
दैव स्वत	11
धूनं न से	55
ध	
धनं माता	15
धनिनं गु	34
धिग्जन्मत	29
धीरे सद्गु	61
न	
नदीभ्यो ज	17
नदीनां स	19
न निन्द्यते	31
न परस्वं	55
न प्रार्थयी	,,
नरस्य भू	12
नरस्तु पू	32
नरो नरस्तू	17
न वृथातु	44
नानाविधा	42
नारिकेल	9
,,	47
नारोजी प	61
निंबवृक्षे	27
निमग्नं स	59
निर्बंधो नै	56
नीचस्य म	23
नीचस्य बु	50
नीचोन मा	23
नीचो जनः	30
नीरन्तु सु	40
नैव गर्व	56
प	
पनसं सु	43
परपुष्टे	48
पराक्रमः	59
पाञ्चालीं प	5
पापाधर्म	60
पायुवद्दु	26
पिपीलिके!	50
पीयूषं ध	,,
पुण्यं सत्यं	13
पुराणश्र	16
पुरा पुरा	2
पूर्वपुण्या	13
प्रकृष्टसु	5
प्रबलन्तु	58
प्रभाकर	41
प्रिया वाक्	15
फ	
फलितः स	43
ब	
बंधनस्थि	51
बंधा बहु	31
बर्बूरं दु	24
बहवः प	48
बिल्व! त्वज्ज	42
भ	
भक्तानाम	7
भाग्यमारो	35
भार्या जाता	11
भार्यानुकू	22
भुजङ्गानां	49
भेक! त्वां	23
भोक्तव्यमा	10
भोगार्थन्तु	,,
भोजने मा	28
म	
मण्डूकान	49
मतङ्गजा	52
मनुजस्य	16
मर्त्येन म	60
महताय	9

श्लोकाः	पुटानि
महताय	33
महताम	36
महतां दु	52
महतो ना	33
महान्त ए	22
महाभारो	58
मातुलिङ्गे	34
मानुषं दु	14
,,	47
य	
यथायोग्यं	31
यदुकुल	6
यस्माद्विश्व	3
यस्य वर्ण	30
यस्योदये	8
याचकस्य	16
ये गुणास्स	30
र	
रंभेति त	42
रसाल इ	43
रे रे काक!	49
ल	
लोकमाता	34
लोहश्च ख	26
व	
वदान्या द	26
वर्णः स्वर्ण	45
वर्तुलत्वं	46
वसन्त स	20
वारस्त्रीषु	35
वासस्त्वां	21

श्लोकाः	पुटानि
वासःस्रग्भू	15
विचार्यैव	56
विद्यास्सर्वा	17
विनतान	47
विनायकं	1
विप्रस्य भू	12
विश्वनाथं	1
विष्णुं केचि	4
वृथा मौनं	15
वृश्चिकस्य	23
व्रतं विना	16
श	
शम्भुं विभुं	4
शुद्धः कल	24
शुद्धोऽप्यशु	23
शुनाश्च पि	52
श्रेयसो भू	12
श्रोतव्यन्तु	60
श्रोतव्यं मा	55
श्रोतव्यं सु	,,
स	
संभाषणं	24
सज्जनः से	20
सज्जनस्य	26
सज्जनानां	21
सतामनु	57
सत्पात्रं म	54
सत्स्वपि स्वे	39
सदाशिव	1
सद्वृक्षाणां	19
सधनोऽपि	34

श्लोकाः	पुटानि
सन्तोष ए	13
सन्मर्त्यानां	22
सर्वदातु	24
सर्वदाहं	56
सर्वेषामु	9
सहकारे	43
सामान्यं स	13
सिंहं दृष्ट्वा	51
सीमन्तिनी	58
सीमन्तिन्यो	35
सुखान्मद	14
सुखिनोतु	33
सुगुणास्स	31
सुरद्रुमे	3
सुरूपं सु	33
सुवर्ण! त	36
सुवृत्ता	2
सूर्यालोका	41
सेवानिष्फ	35
स्वतःशुद्धा	35
स्वयंकला	38
स्वयंधाम	,,
स्वयशेव	15
स्वाकृतेर	31
स्वामी गुण	37
स्वेन यद्व	21
ह	
हंसा दूर	46
हरिनाम्नि	9
हित्वा चारु	28
हे मक्षिके!	50